திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 12 டிசம்பர்–06

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

டிசம்பர்–06

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ. | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி வீ. காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி செ. தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பி.எச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 100
பகுதி : 12
*டிசம்பர்* 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2037**




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 833

வாயில் எது? கவிவேந்தர் கா. வேழவேந்தன் 835

பாவாணர் காட்டும்
தமிழர் இல்லறக் கோட்பாடு 836
முனைவர் கு. கதிரேசன்

வைத்தியநாதரின் வினைச்சொற்கள் 858
முனைவர் பெ. சுயம்பு

இராமர் பாலமா?..... முனைவர் ஆதி. பாலசுந்தரன் 864

# இதழ்மணம்

கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களுடைய *"வாயில் எது?"* என்னும் கவிதை இவ்விதழில் நறுமணம் பரப்புகிறது. இக்கவிஞர் பெருமகனார் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் மாபெரும் கவிஞர்; இவருடைய கவிதைகள் சொல்வளமும் கருத்தழகும் பயில்பவர் நெஞ்சை ஈர்க்கும் உணர்வும் உடையவை. இவருடைய கவிதைகள் காலத்தை வென்று தமிழ் நெஞ்சங்களில் தொடர்ந்து இடம்பிடிக்கும் தகைமையுடையன. வாயில் எது? என்னும் கவிதை வாழ்க்கையின் பழுத்த அனுபவத்தின் தேடல் ஆகும். அதனால் இக்கவிஞர் பெருமகன் புதிய உலகை படைக்க வேண்டுமென்ற அவா உடையவர்கள் அறிவைத் தேடல் வேண்டும் நூல்கள் வாயிலாக தேடல் வேண்டும் என்பதையும் ஆசிரியர் மாணவர்களுக்குத் தெரிவிக்கின்றார். பலமுறை கற்று அனுபவிக்க வேண்டிய செய்திகள் வாயில் எது? என்னும் தலைப்பில் கவிதையாக மலர்ந்துள்ளது. ஒவ்வொரு கருத்தும் மலரின் ஒவ்வொரு இதழ் ஆகும். கவிதையாக அமைந்து ஒவ்வொரு அடியும் தனிக் கவிதையாகச் சிந்திப்பவர் நெஞ்சை ஈர்க்கிறது.

முனைவர் கு. கதிரேசன் அவர்கள் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் பணியாற்றுகிறார். அவர் *"பாவாணர் காட்டும் தமிழர் இல்லறக் கோட்பாடு"* என்னும் அரிய கட்டுரை வாயிலாக செந்தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமாகிறார். இக்கட்டுரையில் இல்லற வாழ்விற்கு இன்றியமையாத நெறிமுறைகளை மொழி ஞாயிறு பாவாணருடைய சிந்தனை வழி நின்று எடுத்துரைக்கிறார். இல்லற வாழ்விற்கு தமிழர்கள் போற்றிய கருத்துவழி வாழ்க்கை மரபுகளை கை நழுவ விட்டு மூட நம்பிக்கையின் அறியாமை வழியில் ஜோதிடங்கள் கூறும் பொய்மைகளை எல்லாம் வாழ்விற்கு ஆதாரமாகக் கொண்டு சடங்கு நெறி நின்று மையலுறும் தமிழ்ச் சமூகத்தின் அவலத்தை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. இல்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக நடைமுறையில் உள்ள பிற உலக நாடுகளில் ஆண், பெண் அறிமுகம், அன்பு, கருத்தொற்றுமை தொழில் ஆகிய உலகியல் தேவையும் பொருத்தமும் திருமணத்தை முடிவு செய்கின்றன. இங்கே சங்ககாலத்தில் தலைவன் தலைவியுடைய காதல் திருமணமே நடைமுறையில் இருந்தது. அதுவே வாழ்க்கை நெறியாகவும் இருந்தது. அயலார் தலையிட்டால் முடைநாறும் மூடப்பழக்கங்கள் தமிழ்ச் சமூகத்தில் புகுந்து அன்பற்ற இல்வாழ்க்கை

ஒழுகலாறுகள் கணவன் மனைவியை இன்று துன்பச்சூழலில் அவலத்தில் தள்ளியுள்ளது. இச்செய்திகளின் ஆழத்தை ஆசிரியர் கதிரேசன் பாவாணர் வழி நின்று வகுத்தும் தொகுத்தும் விரிவாக சிந்தித்திருக்கிறார். இச்செய்தி ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தின் வீட்டுக் கதவையும் தட்டி சேரவேண்டிய நுட்பமான உண்மைகளாகும். திருமணம் செய்துகொள்கின்ற மணமக்களும் பெற்றோர்களும் தமிழ்ச் சமூகமும் இருக்கத்தைத் தளர்த்தி மனம் திறந்து சிந்திக்க இக்கட்டுரை பயன்படும்.

தமிழறிஞர் ஆதி. பாலசுந்தரன் அவர்கள் இலங்கைக்கும் இராமேச்சுரத்திற்கும் இடையே கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்த கடலை ஆழப்படுத்த இந்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது கடலுக்கடியில் புதைந்துள்ளவை இராமர் கட்டிய பாலமா? அல்லது பவளப் பாறைத் தொடரா? என்பதை புவியியல் அடிப்படையிலும் இராமாயண இதிகாசம், சங்க இலக்கியம், தேவாரம் போன்ற சான்றுகளையும் எடுத்துக் காட்டி கட்டுரை அமைத்திருக்கிறார். ஆசிரியருடைய அறிவியல் சிந்தனை பாராட்டிற்குரியது. தமிழகத்தில் நடந்துள்ள தொடர் புவி அகழ்வாய்வுகள் தமிழகம் ஒரு காலத்தில் நாகரீகத்தின் தொட்டில் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதே நேரத்தில் கடலுக்கடியில் இராமன் பாலம் கட்டினான் என்ற செய்தி பொருந்தாது என்பதையும் ஆசிரியர் நயம்பட சான்றுகாட்டி கட்டுரை அமைந்திருப்பது கட்டுரையைப் படிக்கும் அனைவருடைய பாராட்டிற்கும் உரியவர் ஆதிபாலசுந்தரனார் என்பதை உணரலாம்.

தமிழறிஞர் பெ. சுயம்பு தமிழ் இலக்கண இலக்கிய கட்டுரை வழியாகச் செந்தமிழ் வாசகர்கள் நன்கு அறிந்த பேராசான். இவ்வறிஞர் தமிழ் இலக்கண இலக்கியமும் மொழியியல் துறையும் முறையே கற்றுத் தேர்ந்த நல்லாசிரியர். இவர் தொல்காப்பியம், நன்னூல் உரையாசிரியர்களை எல்லாம் கற்று அதன் வன்மை, மென்மைகளை வெளியிடும் தகுதிசால் அறிஞர். இவர் தொல்காப்பியம் நன்னூலோடு வைத்தியநாத தேசிகர் எழுதிய "இலக்கண விளக்கம்" என்னும் இலக்கண நூலை ஒப்பிட்டு ஆய்வு செய்கிறார். இக்கட்டுரையில் வினைச்சொல் குறித்த ஆய்வு நுண்ணிதின் சிந்திக்கப்படுகிறது. இக்கட்டுரை தமிழறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் கற்று சிந்தித்துக் கருத்துக்களைப் பாகம் செய்வதற்குரியதாகும்.

# வாயில் எது?

— கவிவேந்தர் கா. வேழவேந்தன்—

காதலுக்கு வாயில் எது? கண்கள்! நல்ல
கவிதைக்கு வாயில் எது? உணர்ச்சி! பாழும்
மோதலுக்கு வாயில் எது? கோபம்! வாழ்வின்
முன்னேற்றவாயில் எது? உழைப்பு! நெஞ்ச
வேதனையின் வாயில் எது? குற்றம்! காணும்
விடியலுக்கு வாயில் எது? ஊக்கம்! என்றும்
சாதனைக்கு வாயில் எது? முனைப்பு! நந்தம்
தமிழுக்கு வாயில் எது? இனிமை என்பேன்!
பதவிக்கே வாயில் எது? உதவி! போற்றும்
பண்புக்கே வாயில் எது? ஒழுக்கம்! செய்யும்
உதவிக்கே வாயில் எது? பரிவு! கேட்கும்
உரிமைக்கே வாயில் எது? கடமை! ஓடும்
நதிப்பெருக்கின் வாயில் எது? அருவி! பேசும்
நாவண்மை வாயில் எது? கருத்து! தோன்றும்
புதுமைகட்கே வாயில் எது? தேடல்! ஆழ்ந்த
புலமைக்கே வாயில் எது? நூல்கள் என்பேன்!

# பாவாணர் காட்டும் தமிழர் இல்லறக் கோட்பாடு

டாக்டர். கு. கதிரேசன்
தமிழ்த்துறை
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர் – 625 216.

## ஆய்வு முகப்பு

பாவாணர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர். அவருடைய புலமை, தெளிவும், துணிவும் மிக்கது. தமிழ்ப் பெருநூற்கள் தமிழரால் நன்கு கற்று உணரப்பட்டு, தமிழ் நெறியில் தமிழர் நின்று வென்றிட வேண்டுமென்பதில் தளராத விருப்பம் கொண்டோர்க்கெல்லாம் பாவாணரின் புலமை நம்பிக்கை தந்து வருகிறது என பேரறிஞர் அண்ணாவே புகழ்ந்துரைக்கும் அளவுக்குப் பெரும்புகழும் பேறும் பெற்றவர் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர். இதற்கு அடிப்படைக் காரணம் அவரிடம் குடி கொண்டிருந்த கொள்கைப் பிடிப்பும் தமிழ் மொழி–பண்பாட்டுத் துடிப்புமாகும். தாம் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றியடையும் வரை பின்வாங்காத கொள்கைப் பிடிப்புடையவராக விளங்கினார் பாவாணர். அதை எந்த வகையிலும் எந்தச் சூழலிலும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்காமல் மன உறுதியுடன் விளங்கியவர். தமிழ்மொழி பண்பாட்டு வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த கொள்கை உறுதிப்பாடும் அதில் நெகிழ்வில்லா தன்மையுமே அவருக்குப் பல தொல்லைகளை உருவாக்கித் தந்தன. அதனையும் எதிர்கொண்டு பல்வேறு துறைகள் சார்ந்த பல்வேறு நூல்களை வெளியிட்டு சாதனை படைத்தார். ஆயினும் அவர் கொள்கைகளும் வாழ்க்கை வரலாறும் எதிர்பார்த்த அளவிற்கு அடையாளப்படுத்தப்படாமல் போய்விட்டது. இதற்குக் காரணம், அவரது கொள்கை உறுதிப்பாடு, மொழி, பண்பாட்டுப் பற்று அதனால் ஏற்பட்ட பொறாமை உணர்வு முதலியவையாகும். அந்த வகையில் பாவாணர், மொழி சமயம் கடவுள் பண்பாடு வாழ்க்கை முதலியவற்றில் தமக்கென தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருந்தார். அவரது தமிழ்ப் பண்பாட்டுக் கொள்கையில் தமிழர்களின் இல்லறம் பற்றி அவர் கொண்டிருந்த அரிய புதிய கோட்பாடுகள், பல புதிய சிந்தனைகளையும் சீர்திருத்த உணர்வுகளையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. தமிழ்ச் சமூகச் சூழலில் காலம் காலமாக நிலவி வந்த இல்லற வாழ்வியல்

பற்றி அவர் கொண்டிருந்த கொள்கைகள் பழமையான தமிழ்ச் சமூகத்தை அறிவார்ந்த, புதுமையான, புரட்சிகரமான சமூகமாக மாற்றவல்லவை. அவற்றை ஆராய்ந்து அறிவது எதிர்வரும் தமிழ்ச் சமூகம் புதிய நவீன வாழ்வியல் பண்பாட்டை அறிந்து அதன் வழி நடக்கப் பேருதவியாக அமையும். எனவே தமிழ்ச் சமூகச் சூழலில் பாவாணர் கொண்டிருந்த இல்லறக் கோட்பாட்டை ஆராய்வதும் அறியத் தருவதும் இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

## ஆய்வுத் தேவையும் கட்டமைப்பும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் வகுத்துத் தந்த வாழ்வியல் பண்பாட்டுக் கொள்கையில் தலையாய இடம் பெற்றது அவர் உருவாக்கிய தமிழர் இல்லறக் கோட்பாடாகும். தமிழ்ச் சமூகச் சூழலில் காலம் காலமாக வழக்கில் இருந்து வந்த திருமணச் சடங்குகள் முறைகளை விளக்கி, தம் ஆய்வுப் புலமையைச் செலுத்தி காரண காரிய அடிப்படையில் விவாதித்து அறிவியல் பூர்வமான, பகுத்தறிவுக்கு ஒத்து வரக்கூடிய கோட்பாடுகளை வகுத்துத் தந்துள்ளார். அவற்றை ஆராய்ந்து அறிவதன் மூலம் தமிழர் இல்லற முறைகளையும் தமிழருக்கு அவர் தரும் அறிவார்ந்த இல்லறக் கோட்பாடுகளையும் இனம் காணலாம். இது தமிழரின் இல்லற வாழ்க்கையை அறியாமைத் தளத்திலிருந்து மாற்றி அறிவார்ந்த தளத்திற்குக் கொண்டு செல்ல முயற்சிப்பதுடன் தமிழர் வாழ்வில் இல்லறம் தொடர்பான முரண்பாடுகள் ஏற்படாமல் தடுக்க வழிவகை செய்கிறது. ஆண்–பெண் இருபாலரிடையே இல்லறம் தொடர்பாக ஏற்படும் கருத்து முரண்பாடுகளுக்குக் காரணமான புறக் காரணிகளைத் தோலுரித்துக்காட்டி, இரு மனங்கள் அன்பின் தளத்தில் ஒன்றுபடும் உயர்ந்த உத்தியை அடையாளம் காட்டும் வகையில் மனித நேயத்தளத்தில் புதிய நவீன அறிவார்ந்த இல்லறக் கோட்பாடுகளை வகுத்துத் தந்துள்ளார். மனித வாழ்வின் வாழ்க்கை அடிப்படை நிகழ்வுகளில் தலையாயது திருமணம் பற்றிய மகிழ்வும் மனநிறைவுமாகும். இன்றைய தமிழ்ச் சமூகம் மட்டுமல்லாது மனித சமூகம் முழுமைக்கும் இன்றியமையாதது. இத்தகைய இன்றியமையாத தளத்தில் பாவாணர் அளித்துள்ள வாழ்க்கைத் தத்துவமான இல்லறக் கோட்பாட்டை அடையாளம் காண்பது அவசியம். அந்த வகையில், இக்கட்டுரையில் முதலில் ஆய்வுப் பின்புலம் சுருக்கி விளக்கப்படுகிறது. தொடர்ந்து மனித வாழ்க்கைக்கும் இல்லறத்திற்கும் உள்ள தொடர்பு குறித்துப் பாவாணர் இனம் கண்ட கருத்துகள் ஆராயப்படுகின்றன. பண்டைத் தமிழர் திருமணச் சடங்குகள் பற்றிய பாவாணரின்

கொள்கைகள் இனம் காணப்படுகின்றன. தமிழர் இல்லற வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி பாவாணர் தந்த விழிப்புணர்வுக் கருத்துகளும் கொள்கை முடிவுகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. பாவாணர் தமிழர் திருமண வாழ்வுக்காக வகுத்த கோட்பாடுகளும் சீர்திருத்த முயற்சிகளும் ஆராய்ந்து அறியப்படுகின்றன. இறுதியில் முடிவுகளும் துணைநின்ற நூல்களும் குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய ஆய்வுக் கட்டமைப்புடன் ஆராய்வதன் மூலம் பாவாணர் இனம் கண்ட தமிழ்ச் சமூகச் சூழலுக்கேற்ற தமிழர் இல்லறக் கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளமுடியும்.

## தமிழ்ச் சமூகச் சூழலில் இல்லறம் - ஆய்வுப் பின்புலம்

தொடக்க காலத் தமிழ்ச் சமூகத்தில் எவ்விதத்திருமண முறைகளோ, திருமணச் சடங்குகளோ இருந்திருக்க வாய்ப்பில்லை. வயது வந்த ஆணும் பெண்ணும் மனம் விரும்பிக் கலந்து கருத்தொருமைப்பட்டு தாமே கூடிக் குடும்பம் நடத்தியிருக்க வேண்டும். நாகரிகம் தோன்றுவதற்குமுன் மனிதன் ஒருவகை விலங்குநிலை சிந்தனையுடன் உண்ண, இருக்க இடம், உடலை மறைக்கும் வழிமுறைகள், உடல் இச்சைகளைத் தீர்த்துக்கொள்ள கையாண்ட நடைமுறைகள் முதலிய பல்வேறு கூறுகளைத் தன் மனம்போன போக்கில் தேவைக்கேற்ப, வாய்ப்பிற்கேற்ப அமைத்துக் கொண்டான். இந்நிலையில் அவன் பிற சமூக–புறக் காரணிகளைப் பற்றி சிந்திக்கவே இல்லை. இப்பண்பாட்டு மரபு வழக்காறுகளுக்கென எவ்வித வரையறைகளையும் சட்டதிட்டங்களையும் ஒழுக்கங்களையும் உருவாக்கிக் கொள்ளவோ கடைப்பிடிக்கவோ இல்லை. ஆண், பெண் என்னும் இருவகை மனிதப் பிரிவுகளுக்கேற்ற சிந்தனைகளையும் கொண்டிருந்தான். இச்செயற்பாட்டு வழக்காறுகளுக்கு முன் அவன் பிறரைப் பற்றியோ பிறர் மன உணர்வு, பாதிப்பு நிலைகள் பற்றியோ எண்ணவில்லை. தன் உள்ளம்–உடல் உணர்வுகளுக்கேற்ற செயல்களைத் தன் சுயசுதந்திரத்துடன் கட்டுப்பாடின்றி செய்து வாழ்ந்து வந்தான்.

காலப்போக்கில் மனித இன வளர்ச்சியினால் ஏற்பட்ட அறிவார்ந்த மற்றும் அவனது வாழ்வில் பல நிலைகளில் பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்தியது. கலை, கல்வி, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனித இன வரலாற்றில் பல புரட்சிகரமான பரிணாமம் ஏற்பட்டது. மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். தன்னைச் சுற்றியுள்ள

புறக் காரணிகளைப் பற்றி அறிந்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் செயல்பாட்டு நிகழ்வுகளுக்கு ஏற்ப, தன் வாழ்வியல் பண்பாட்டு மரபுகளையும், வழக்காறுகளையும் உருவாக்கிக் கொண்டான். அந்நிலையில் தனி மனித வாழ்க்கை எனும் நிலையிலிருந்து மாறி சமூகக் கூட்டமைப்பு வாழ்க்கை எனும் புதிய கட்டமைப்பிற்குள் வந்தான். அது, மனித இனத்தின் வாழ்வியல் பண்பாட்டு நிலையில் காலம், இடம், தொழில் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, பல வேறுபாடுகளை உருவாக்கி ஒரு புதிய சகாப்தத்தை பரிணமித்தது. அந்நிலையிலேயே மனித இனத்தில் வழிபாடு—வாழ்வியல் வழக்காறுகள் பல தோன்றி புதிய சமுதாயம் உருவானது. இப்புதிய மறுமலர்ச்சியடைந்த சமுதாயத்திலேயே இனக்குழு அமைப்புகளும் வழக்காறுகளும் பண்பாட்டு மரபுகளும் தோன்றி புதிய புதிய ஒழுக்கங்களையும் சட்டதிட்டங்களையும் வரையறைகளையும் வாழ்க்கை நெறி—முறைகளையும் உருவாக்கின. அவ்வாறு மனித இன வரலாற்றில் புதிதாக உருவான வாழ்க்கை ஒப்பந்த இல்லற வாழ்க்கை முறையே திருமண மரபு ஆகும். சமூகம் ஒழுங்குற்றுப் பல்வேறு குலப்பிரிவுகள் தொழிலடிப்படையில் தோன்றிய பிறகு சில வரையறைகளை மேற்கொண்டனர். (அ.தட்சிணாமூர்த்தி 1980 49) என்னும் கருத்து இங்கு பொருத்திப் பார்க்கத் தக்கது. மேற்குறிப்பிட்ட கருத்துப் பின்னணியில் ஓர் ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட வரையறைக்குத் தெரியாதவாறு நிகழும் பொழுது களவுக் காதல் எனும் முத்திரையைப் பெறுகிறது. இக்காதல் முற்றி இல்லறம் என்னும் வாழ்வியல் நோக்கைத் தொடும்பொழுது திருமணம் என்னும் வாழ்வியற் சடங்கு தோன்றி பல்வேறு பண்பாட்டு மரபுகள் பரிணாமம் பெறுகின்றது. இந்நிலையைக் கற்பு காதல் என வழங்குகின்றனர். இவ்வாறு களவு, கற்பு எனும் இருநிலைகளில் ஆண் பெண் இல்லறம் இயங்குதளத்தில் நிலைப்படும்பொழுது திருமணம் என்னும் வாழ்வியல் சடங்கு மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவ்வாறு ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இனிய இம்மை இன்ப வாழ்க்கையை இல்லறம் எனக் குறிப்பிடுகிறார். பாவாணர். மனைவியோடு கூடி இல்லத்திலிருந்து, அதற்குரிய அறஞ்செய்து வாழும் வாழ்க்கை இல்லறம் (ஞா. தேவநேயன் 1956 )என்னும் கருத்து இல்லறம் பற்றிய பாவாணரின் கொள்கையை அடையாளம் காட்டுகிறது. இத்தகைய இன்ப உணர்வின் அடிப்படையிலேயே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் வகைப்பாட்டில் இல்லற இன்பத்தை அடக்கிப் பார்க்கிறார் பாவாணர். இன்பம் என்பது பெண்ணின்பமே என்பது பாவாணரின் கொள்கை

முடிவு. இம்மையில் எத்தனை இன்பம் இருப்பினும் இந்தப் பெண்ணின்பத்தையே பேரின்பமாகக் கருதுகிறார் பாவாணர். காரணம் இது ஐம்புலன்களுடன் தொடர்புடையது. ஐம்புலன்களும் செயல்பட்டு இன்பம் நுகரும் இனிய இல்லறத் தளமாகையால் இதனையே இம்மை இன்பம் எனக் கொள்வது சாலப் பொருந்தும். ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் செயல் மேற்குறிப்பிட்ட இல்லறத்திற்கு எதிரான செயற்பாடாகையால் அது துறவறம் எனப்படுகிறது. எனவே இவ்வுலகின் மனித இன அடிப்படை பெண்ணின்பமே. அதுவே இம்மையில் பேரின்பமாகக் கொள்ளப்படுகிறது என்னும் இல்லறத்தின் அடிப்படையை எடுத்துக் காட்டும் பாவாணரின் கருத்திலிருந்து அவரது தமிழர் இல்லறக் கோட்பாட்டின் பின்புலத்தை விளங்கிக் கொள்ளலாம். ஒருவருக்கு ஊண் இசை காட்சி முதலிய பிறவற்றாலும் இன்பமுண்டாகுமேனும், பேரிளவுபற்றியும் ஐம்புலனுந்தழுவல் பற்றியும், பெண்ணின்பமே இம்மையிற்பேரின்பமாகக் கொள்ளப் பெற்றது என்னும் பாவாணரின் கூற்று. மேற்குறிப்பிட்ட கருத்தினை உறுதிசெய்கிறது. இதனை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்,

பெண்ணின் பெருந்தக்க யாவுள (குறள் 54)

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (குறள் 1101)

என்னும் திருவள்ளுவரின் கொள்கை முடிவினைத் தம் கருத்திற்குக் கட்டியம் சேர்க்கும் வகையில் சுட்டிக் காட்டுகிறார். இதன் மூலம் அவரது கொள்கைத் தெளிவினையும் உறுதிப்பாட்டையும் உண்மையையும் விளங்கிக் கொள்ள முடியும்.

இம்மை இன்பமாகிய பெண்ணின்பமும் மறுமை இன்பமாகிய வீட்டின்பமும் ஒப்பு நோக்கு வகையால், முறையே சிற்றின்பம் பேரின்பம் எனப்படினும் சிற்றின்பமே இயற்கைக் கேற்றதும் உடனே நுகர்தற்குரியதும் எளிதாய்க் கிட்டுவதும் கண் கூடாகக் காணப்பெறுவதுமாயிருத்தலின் அதுவே பெரும்பாலரால் விரும்பப்படுவதாம் என்னும் பாவாணரின் கருத்து இம்மை இன்பமாகிய சிற்றின்பமே சிறப்புடையது. அதனைப் பெற்று பின்பு வீடுபேறு என்னும் பேரின்ப நிலையை அடைவதே அனைவரும் விரும்புவது. அத்தகைய இன்பத்தை அடைவதற்கே மனித உயிரியக்கம் விருப்பம் கொள்கிறது எனப்புரட்சிகரமான சிந்தனை வெடிப்பையும் கருத்துத் தெளிவையும் கொண்டு விளங்கும் பாவாணரின் தமிழர் பண்பாட்டுப் பின்புலம் புலனாகிறது.

"ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் மனையாளும் காதலனும் – தீதின்றிப்
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்னும் ஔவை மொழியைச் சான்றாக எடுத்துக்காட்டி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நூற்பொருளின் இயல்பையும் நன்றாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் பாவாணர். இதன் மூலம் நால்வகைப் பொருள் பற்றிய பாவாணரின் கருத்துகளையும் கோட்பாடுகளையும் இனம் காண முடியும். இத்தகைய பண்டைத் தமிழ்க் கோட்பாடே பாவாணரின் தமிழ்ச் சமூக இல்லறம் பற்றிய அடிப்படைத் தத்துவத்தை விளங்கிக் கொள்ளத் துணை செய்கிறது.

இம்மை இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்ப வாழ்வு பற்றி பண்டைத் தமிழர்கள் மிக உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். இத்தகைய குடும்ப வாழ்க்கை, அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறம் என்பது பண்டைத் தமிழர்களுக்கு வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமல்ல, வாழ்க்கையே அறமாக இருந்தது. இத்தகையப்பண்பாட்டு மரபினால்தான் குடும்ப வாழ்க்கையை 'இல்லறம்' என்னும் சொல்லால் குறித்தனர். இல்லறத்தைத் துறந்து வாழ்ந்த துறவுநிலை வாழ்க்கையைத் துறவறம் என்றனர். இத்துறவறமும் இல்லறத்திற்குப் பின் மேற்கொள்வதே சாலப் பொருந்தும். மாறாக குடும்ப வாழ்க்கை எனும் இல்லறத்திற்குள் ஈடுபடாமல் துறவறத்தை மேற்கொள்வது மதிக்கப்படாத வழக்காறாக அமைந்தது. "மணவாத் துறவுக்கு மதிப்பளிக்கப்படவில்லை; மாறாக இல்லறத்தைச் செம்மையுற ஆற்றிக் காமம் சான்ற கடைக் கோட்காலை ஏமம் சான்ற மக்களோடு கூடி அறம்புரி சுற்றமோடு சிறந்தது பயிற்றலையே விரும்பியுள்ளனர்" (அ. தட்சிணாமூர்த்தி: 1980: 55)

திருவள்ளுவர் தம் திருக்குறளில் 'அறத்துப்பால்' என்னும் ஒரு பகுதியை அமைத்து அதில் அதிகாரங்களை அமைத்துள்ள முறையே இதற்குச் சான்றாகும். மெல்ல மெல்லத் தன் உள்ளம் விரித்துத் தன் பிள்ளை, தன் சுற்றம் என்னும் எல்லைகளைக் கடந்து அனைத்துயிர்க்கும் அருள் செய்யும் மனநிலையடைவதே வாழ்வின் நோக்கமாகும். இப்பழுத்த மனநிலையைப் பெறுவதற்கான பள்ளியே இல்லறம் எனக் கருதியுள்ளனர். இவ்வாறு அறவழியில் இல்லறத்தைக் கடைபிடித்த பலர்; தமிழ்ச் சமூகச் சூழலில் நல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டு முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். இத்தகைய

முன்மாதிரிப் பின்னணியில்தான் பாவாணரும் அறவழி இல்லறத்தை வலியுறுத்தும் நோக்கில் தமிழர் இல்லறம் பற்றி ஆராய்ந்து தமிழ்ச் சமூகச் சூழலுக்கேற்ற கொள்கைகளை வகுத்துள்ளார். இக்கொள்கை முடிவுகளையும் கருத்துகளையும் இனம் காண்பது பாவாணரின் தமிழர் இல்லறம் பற்றிய கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளத் துணை செய்யும்.

### மனித வாழ்க்கைக்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பு:

மனித வாழ்க்கையில் 'திருமணம்' என்னும் வாழ்வியல் சடங்கிற்கு மிகமுக்கியமான இடம் உண்டு. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஒரு முறையே நடைபெறும் வாழ்க்கை அடிப்படைச் சடங்கே திருமணம். தொடக்க காலத்தில் இருமனங்கள் இணைந்து கூடி வாழ்ந்த ஆணும் பெண்ணும் பண்பட்ட நிலையில் வாழ்வில் தொடர்புடைய பிறருக்கு அறிவிக்கும் வகையில் திருமணம் என்னும் சடங்கை நிகழ்த்துகின்றனர். அந்தவகையில் திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழப்போவதைப் பிறருக்குத் தெரிவிக்கும் ஓர் அறிவிப்பு விழா நிகழ்ச்சியே ஆகும். அதோடு ஆணும் பெண்ணும் தங்களுக்குள் இணைபிரியாமல் வாழவேண்டுமென்னும் உறுதிமொழியை எடுத்துக் கொள்ளும் சடங்கும் ஆகும். சடங்கு என்பது ஒரு நிகழ்வைக் கண்டிப்பாகச் செய்தே ஆக வேண்டும் என்னும் கட்டாய நியதியுடன் கூடிய வழக்காறு ஆகும். இந்தப் பின்னணியிலேயே திருமணம் என்னும் வாழ்வியல் சடங்கு அமைந்து விளங்குகிறது. தமிழ்ச் சமூகச் சூழலில் இச்சடங்கு வாழ்வியல் பண்பாட்டிற்கேற்ப ஒருவகை அழுத்தத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்று மிக உயர்வான கட்டாயச் சடங்காக வடிவம் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் திருமணம் என்னும் வாழ்க்கைச் சடங்கு தொடர்பாகத் தமிழர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் ஈடுபாடும் ஆகும். எனவேதான்,

"திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்"
"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்"
"ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தப் பண்ணி வைக்கலாம் தப்பில்லை"
"வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணம் பண்ணிப்பார்"

(ஆறுமுகம் : முதுமைந்தன்மொழி : நேர்முகம்)

என்னும் சொல்வழக்குகள் நாட்டுப்புற பாமரமக்களிடம் இன்றும் நின்று நிலவுகின்றன. இச்சொல்வழக்குகள் தமிழ்ச் சமூகச் சூழலில் திருமணத்திற்கு இருந்த இடத்தையும் முக்கியத்துவத்தையும்

தெளிவுபடுத்துகின்றன. இத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே *மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் தமிழ்ச் சமூகச் சூழலுக்கு ஏற்ற* திருமணக் கோட்பாடுகளை வகுத்துத் தந்துள்ளார். அவற்றை இனம் காண்பது இன்றியமையாதது.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு சிறிதேனும் இன்பமாய் வாழ விரும்புவதாலும் அவ்இன்பத்திற்கு இன்றியமையாது வேண்டுவது பொருள்; அப்பொருளைப் பெற்றவர்கள், செய்ய வேண்டிய கடமை அறம் ஆகும். இம்மையில் மக்கள் வாழ்க்கைக் குறிக்கோள் "இன்பமும் பொருளும் பெற்றோர் செய்ய வேண்டிய கடமை அறம். ஆதலால் இம்மையில் மக்கள் வாழ்க்கைக் குறிக்கோள், இன்பமும், பொருளும், அறமும் என மூன்றாகக் குறித்தனர் முன்னோர். இம்மூன்றினுள்ளும் அறம் சிறந்ததாயும் ஏனையிரண்டுக்கும் பொதுவாயுமிருத்தலான் அறவழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு அறவழியில் இன்பம் துய்க்க வேண்டுமென்னும் கருத்தால், அறத்தை முன்வைத்து முப்பொருளையும் அறம் பொருள் இன்பம் என மாற்றியமைத்தனர் பின்வந்தவர்கள்' என்னும் பாவாணரின் கருத்து தமிழர் திருமணம் பற்றிய அறிமுகத்தை உறுதி செய்கிறது. இதன் மூலம் தமிழ்ச் சமூகச் சூழலில் திருமணம் என்பது அறவழியில் நிகழ்வதே என்னும் கருத்தைப் பெற முடிகிறது. தவறாமல் ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழும் திருமணம் அறவழியில் நிகழ வேண்டும். அதுவே தமிழ்ச் சமூகச் சூழலுக்கும் தமிழர்களுக்கும் ஏற்றது எனக் கூறுவதன் மூலம் தமிழ்ச் சமூகச் சூழலுக்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பைப் பாவாணர் அடையாளப்படுத்தும் தன்மையை விளங்கிக் கொள்ளலாம்.

பாவாணர் அறத்தோடு கூடிய இல்லறத்தை மிகவும் போற்றினார். விலைமகள் உறவையும் நெறி திறம்பிய காம நுகர்ச்சியையும் பழிக்கலாமேயன்றி பெண்ணின்பத் தன்மையே பழித்தல் கூடாது *(1950 : ii)* என்பது *பாவாணரின் கொள்கை முடிவு*. இவ்வாறு பெண்ணின்பத்தைப் பழிப்பவர்கள், இறைவனின் ஏற்பாட்டையும் தம் பெற்றோரின் வாழ்க்கையினையுமே பழிப்பவர் ஆவர் எனக் கருதினார். இத்தன்மையின் மூலம் அவர் அறத்தோடு கூடிய இல்லறத்தையும் நெறியுடன் கூடிய பெண்ணுறவையும் போற்றிய பாங்கும் திருமண பந்தம் பற்றி அவர் கொண்டிருந்த கோட்பாடும் புலனாகின்றன.

மனித வாழ்க்கையின் இரு நிலையான இல்லறம் துறவறம் ஆகியவை பற்றியும் பாவாணர் குறிப்பிடும் கருத்துகள் அவரது

திருமண வாழ்க்கையை இல்லறம் என்னும் உலகப் பற்றைத் துறந்து அதற்குரிய அறத்தோடு கூடிக் காட்டில் தவஞ்செய்து வாழும் வாழ்க்கையைத் துறவறம் என்றும் விளக்கி வகைப்படுத்துகிறார் பாவாணர். பொதுவாக “முற்றும் துறந்தவன் முனிவன் பற்றற்றவன் துறவி துறந்தவன் துறவி” என்றெல்லாம் கூறும் சொல்வழக்குகள் துறவு வாழ்க்கையை அடையாளப் படுத்துகின்றன. ஆயினும் பாவாணர் இக்கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு மிக நுணுக்கமாக ஆராய்ந்து, அதற்குரிய அறத்தொடு கூடிக் காட்டில் தவம் செய்து வாழும் வாழ்க்கை என விளக்கம் அளிப்பது அவரது உள்ளார்ந்த வாழ்வியல் நுணுக்கத்தையும் கொள்கை முடிவையும் தெளிவுபடுத்துகிறது. பொதுவாக திருமணம் முடிக்காமல் பற்றின்றி வாழ்வதைப் பிரம்மச்சாரிய வாழ்க்கை என்றும் திருமணம் முடித்து பின் மனைவியோடு கூடி வாழாதவனைத் துறவி என்றும் வழங்கும் வழக்கு நிலவுகிறது. பாவாணர், ஒருவன் பிரம்மச்சரிய விரதம் பூண்டு உலகப் பற்றுள்ளவனாக இருந்தால் அது துறவறத்தில் சேராது. இல்லறத்திலேயே அடங்கும் அதாவது “உலகப்பற்றுடன் அதே நேரத்தில் பிரம்மச்சரிய விரதத்துடன் வாழ்பவனும் இல்லறத்தை உடையவனே” என ஆழமான அறிவார்ந்த கொள்கைகளை வகுத்துள்ளார். அதே நேரம், ஒருவன் இல்லறத்திலிருந்து கொண்டு மனைவியோடு கூடி வாழினும் ‘அறம்’ செய்யாது–இருந்தால் அவன் வாழ்க்கை இல்லறம் ஆகாது. அது வெற்று இல்வாழ்க்கையாகும். அதுபோலவே ஒருவன் துறவு மேற்கொண்டு வாழ்ந்தாலும் அதற்குரிய அறத்தோடு வாழவில்லையெனில் அது இல்லறம் துறவறம் என்னும் இரு நிலையிலுமே அடங்காது தீய வினைகளை உண்டாக்கும் அவ்வாழ்க்கையாகி விடும் என்பது பாவாணர் கருத்து. இக்கருத்துப் பின்னணியில் ஆராயும் பொழுது தற்காலத்தில் துறவியானவர்கள் காட்டிற்குச் செல்லாது நாட்டில் தங்கினாலும் இயன்றவரை மக்களுக்குத் தொண்டு செய்து வாழும் வாழ்க்கையே சிறந்த துறவாகும் என்னும் கொள்கையை பாவாணர் கொண்டிருந்தமையை இனம் காணமுடிகிறது. எனவே பாவாணர் குறிப்பிடும் இல்லறம், துறவறம் என்றும் இருநிலைகளிலும் எப்படிஇருக்கிறோம் எங்கு இருக்கிறோம் எப்படித் தோன்றுகிறோம், எப்படி பேசுகிறோம் என்பதைவிட எப்படிச் செயல்படுகிறோம் என்பதே முக்கியமான காரணியாகப்படுகிறது. இருவகை வாழ்க்கை நிலையும் அறம் என்னும் ஒழுக்கத்துடன் தொடர்புடையது. ஆகையால், அது அதற்குரிய அற நெறியுடன் வாழும் வாழ்க்கையே உண்மையான இல்லறமாகவும் துறவறமாகவும் அமைகிறது. அறமற்ற வாழ்க்கை வாழ்க்கையாகாது என்னும் உயர்ந்த கொள்கை முடிவைப் பாவாணர்

கொண்டிருந்தமை புலனாகிறது. திருவள்ளுவர் தம் திருக்குறள் அறத்துப்பாலில் இல்லறவியல் துறவறவியல் என இரு பகுதியைப் பாயிரத்தைத் தொடர்ந்து அமைத்திருக்கும் தன்மை பாவாணருக்கு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். திருக்குறள் அவருக்கு மிகுந்த ஈடுபாட்டைத் தந்தமையால் தான்'திருக்குறள் தமிழ் மரபுரை' என்னும் அரிய நூலைப் படைத்தளித்துள்ளார். அதில் பெற்ற அனுபவமே அவரது இல்லறம் – துறவறம் கோட்பாட்டிற்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தது எனலாம்.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதுஇல் ஆயின் நன்று (குறள் : 49)

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.. (குறள் : 45)

என்னும் வள்ளுவரின் கருத்துகளே பாவாணரின் இல்லறம் பற்றிய கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தன. இக்கருத்துகள் ஏற்படுத்திய தாக்கத்தினாலேயே பாவாணர் பெண்ணின்பத்திலும் பெண்ணை வெறுத்த வாழ்க்கையிலும் கூட அறத்தை வலியுறுத்துகிறார். எனவே; பாவாணர் இல்லறம் துறவறம் என்னும் வாழ்க்கை நிலைகள் பற்றிய தெளிவான கோட்பாட்டை வகுத்துக் கொள்வதற்கு திருவள்ளுவரின் திருக்குறளே அடித்தளம் அமைத்துக் கொடுத்தது என்பதை அறிய முடிகிறது.

"இக்காலத்தில் துறவு பூண்டோர் காட்டிற்குச் செல்லாது நாட்டிலும் நகரத்திலும் தங்கி, தம்மாலியன்றவரை பொதுமக்கட்குத் தொண்டு செய்வது, சிறந்த துறவாகக் கருதப்படுகின்றது" (1950:iii) என்னும் பாவாணரின் கருத்து, தற்காலச் சமூகச் சூழலில் பொதுவாழ்க்கையில் அறவழியில் ஈடுபட்டு வாழ்பவனும் கூட துறவி என்றே கருதப்படுவான். இக்கருத்து துறவியாக இருப்பவன் கூட அறமற்ற வாழ்க்கை வாழ்ந்தால் பொய்த்துறவியாகக் கருதப்படுவான். அவன் பற்றற்றவன் எனக் கூற முடியாது. எனவே உண்மையான மனித வாழ்க்கைக்கு அடிப்படை, அறமே என்பது பாவாணரின் கொள்கை முடிவு. இல்லறத்தின் சிறப்பை அறிந்து தொன்றுதொட்டு வழங்கிவரும் இலக்கிய வழக்குகள் அனைத்தும் அறத்தையே வலியுறுத்துகின்றன. பண்டைத் தமிழ்ப் புலவர் ஔவையார், இல்லறத்தின் சிறப்பை உணர்ந்து "இல்லறமல்லது நல்லற மன்று" எனக் கூறியுள்ளார். இக்கருத்துகள்

பாவாணரின் இல்லறக் கோட்பாட்டிற்குக் கட்டியம் கூறும்சான்றுகளாக அமைகின்றன.

"அன்புடமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய் நன்றியறிதல், நடுவு நிலமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்பன இல்லற வாழ்க்கைக்கு விதிக்கப்பட்ட அறங்கள் ஆகும்." (*பாவாணர் :* 1956 : iv) இவற்றைப் பின்பற்றுபவர்கள், வீடுபேறு அடைவது உறுதி அதில் ஐயமேதுமில்லை. எனவே இல்லறத்தில் ஈடுபடுவோர் மேற்குறிப்பிட்ட அற ஒழுக்கங்களை வாழ்வில் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும்; அப்பொழுதுதான் அது இல்லறமாகும் என்னும் கருத்தை வலியுறுத்துகிறார் பாவாணர்.

*தற்காலத்தமிழ்ச் சமூகச் சூழலுக்கு* ஏற்ப ஆராய்ந்து பார்க்கும்பொழுது மக்கள் தொகைப் பெருக்கம் என்பது மிகப்பெரிய இடர்பாடாக வடிவம் எடுத்துள்ளது. இம்மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த அரசும் மக்களும் பல வழிகளில் முயன்று வருகின்றன. ஆயினும் வெற்றிபெற முடியவில்லை. இத்தகைய மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த புதிய, புரட்சிகரமான வழி ஒன்றைப் பாவாணர் குறிப்பிடுகிறார். "இடர்படும் இக்காலத்தில் துறவறம் சிறந்ததென்று கூறி துறவியரை ஊக்குவித்தல் வேண்டும் என்றே தோன்றுகிறது. (1956 :iv) என்னும் பாவாணரின் கருத்து தற்காலச் சமூகப்பொருளாதாரச் சிந்தனையுடன் வெளிப்பட்டிருப்பதை அடையாளம் காண முடிகிறது. தமிழ்ச் சமூகச் சூழலில் இல்லறத்தினால் ஏற்படும் மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படுத்தும் பிரச்சனை அவரை துறவறத்திற்கு வழிப்படுத்தியுள்ளது என்றால் பாவாணர் எந்த அளவிற்கு சமூகப்பொருளாதார விழிப்புணர்வு உடையவராகத் திகழ்ந்திருக்க வேண்டும்? என எண்ணிப் பார்க்கச் செய்கிறது. இல்லறத்தை மிக விரும்பி, ஒவ்வொருவரும் இல்லறத்திற்குள் கண்டிப்பாக வரவேண்டும் என்றும் இல்லறத்திற்குப் பின்பே துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்க்கமான கோட்பாடுடைய பாவாணர், மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படுத்திய இன்னலினால் மிகவும் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து நாட்டைக்காக்க ஒரு புதிய வழியைக் கூறியிருப்பது அவரது தனித்தன்மையைக் காட்டுகிறது. பாவாணர் நகைச்சுவை உணர்வுடன் எதிர் நோக்குடனும் வேடிக்கையாகக் கூறிய இக்கருத்து வருங்காலச்சமூக மறுமலர்ச்சிக்கு உதவுவதாகவும் சிந்தித்துப் பார்க்கத் தக்கதாகவும் அமைந்துள்ளது.

அதோடு எதிர்காலத்தில் நடக்கக் கூடிய புதுமையைத் தீர்க்க தரிசனத்துடன் கூறியிருக்கும் ஞான முதிர்ச்சியையும் இனம் காணமுடிகிறது. மனிதனின் அடிப்படை வாழ்க்கை முறையையே மக்கள் தொகைப் பெருக்கம் பாதித்துவிடக் கூடிய அபாயத்தை அறியத்தரும் சமூக மறுமலர்ச்சி நோக்கிலும் இக்கருத்தை ஆராய்ந்து பார்க்கலாம். அந்த வகையில் பாவாணர் தம் கருத்துக் கோட்பாட்டில் ஒரு தீர்க்கமான அறிவார்ந்த முடிவுடையவராகத் திகழ்ந்தார் எனலாம்.

மனித வாழ்க்கையின் தலையாய நோக்கமான இல்லறத்தைத் தொடங்கும் நாள் மிகச் சிறப்பானது. இல்லறத் தொடக்கம் ஒரு அத்தியாவசிய சடங்காக, தற்காலத்தில் அது மிக ஆடம்பர சடங்காகவும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இத்தன்மையின் மூலம் மனித வாழ்க்கையில் இல்லறத்திற்கு இருக்கும் முக்கியத்துவம் புலனாகும். திருமணம் என்பது மனிதன் பண்பாட்டு நாகரிகமாக வாழத்தலைப்பட்ட நிலையிலிருந்து தோன்றி வளர்ந்துவருகிறது. இது இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம், நாட்டுக்கு நாடு வேறுபட்டு, செல்வநிலை, கல்விநிலை, தொழில்நிலை, அரசியல், பொருளாதாரச்சமூக நிலை ஆகிய கூறுகளுக்கு ஏற்ப பல்வேறு தனித்தன்மைகளுடன் நிகழ்த்தப்பட்டு வருகிறது. தமிழ்ச் சமூக சூழலைப் பொறுத்தவரை திருமணம் சங்க காலம்தொட்டே இன்று வரை நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால் கால மாறுபாட்டிற்கேற்ப கல்வி, அறிவியல் தொழில்நுட்ப நாகரிக வளர்ச்சிக்கேற்ப சில மாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டுள்ளது.

மனித வாழ்க்கையின் அடிப்படையான இல்லறத்தைத் தொடங்கும் இன்றியமையாத சடங்கான திருமணம் தமிழ்ச் சமூகச் சூழலில் மிக முக்கியமான அழுத்தத்தைப் பெற்றிருந்தது. அது மனித இன வாழ்வுக்கே முன்மாதிரியாக அமைந்தது. தமிழ்ச் சமூகம் மிகப் பண்பட்ட சமூகம் என்பதும் பிற சமூகத்தவர்கள் பின்பற்றி வாழத் தகுதியுடையதாக அச்சமூகம் விளங்கியதும் புலனாகிறது. இத்தகைய தமிழ்ச் சமூகப் பண்பாட்டுச் சிறப்பைப் பாவாணர் தம் நுணுகிய ஆய்வுத் திறனால் இனம் கண்டு கூறியிருக்கிறார். அதனை அறிவது தமிழ்ச் சமூகச் சூழலில் திருமணம் பற்றிய கருத்தாக்கத் தெளிவிற்கு வழிவகுக்கும்.

“ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேர்வதே மணமாம். மணத்தல் கலத்தல் அல்லது கூடுதல் மணவாழ்க்கைக்கென்றே இறைவன்

மக்களை ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருப்பதாலும், அதனிடத்து மிகுந்த அறப்பொறுப்புள்ளமையாலும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூடுவதாலும் மணம் தெய்வத் தன்மை பெற்றுத் திருமணம் எனப் பெற்றது. இப்பெயர் பின்னர், திருமணத் தொடர்பான விழாவையுங் குறித்தது"(1956 : v) என பாவாணர் கூறும் கருத்து திருமணம் பற்றிய தெளிவை ஏற்படுத்துவதுடன், அவரது திருமணம் பற்றிய கோட்பாட்டையும் விளங்கிக் கொள்ளத் துணை செய்கிறது.

தொடக்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் பருவமடைந்த பின் விலங்குகள், பறவைகளைப் போன்று திருமணம் என்னும் வாழ்க்கை ஒப்பந்தச் சடங்கு இன்றியே கூடி வாழ்ந்தனர். இந்நிலையில் ஆடவனோ பெண்ணோ ஒருவரை ஒருவர் ஏதாவது ஒரு நிலையில் ஏமாற்றிவிடும் பழக்கமும் அதனால் ஏமாற்றப்பட்டவர் பாதிக்கப்படும் வழக்கமும் பெருகவே தமிழ்ச் சமூகச் சூழலில் மக்கள் மிகவும் இன்னலுக்கு ஆட்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய அவல நிலையை அறிந்த தமிழ்முனிவர்கள் ஆதாரத்துடன் கூடிய ஏமாற்றமுடியாத வாழ்க்கை ஒப்பந்தச் சடங்கை உருவாக்கினர். அதனைத் திருமணம் என்னும் சொல்லால் குறித்தனர். இத்தகைய சடங்கைப் பாவாணர் 'கரணம்' எனக் குறிப்பிடுகிறார்.(1956 : v) இலக்கியத்தில் இது 'வதுவை மணம்' எனக் குறிப்பிடப்படுகிறது. இது மணமகன் மணமகளைப் பலர் அறிய கடவுள் வடிவங்கள் முன் இயற்கை முன் சூளுரைத்து எந்தச் சூழ்நிலையிலும் பிரியாமல் வாழ்வோம் என உறுதி எடுத்துக்கொள்ளுதலும் அனைவரும் வாழ்த்துதலுமான வாழ்க்கைச் சடங்கு ஆகும். இதனை,

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல். கற்.4)

என்னும் தொல்காப்பிய நூற்பா திருமணச் சடங்கு பற்றிய அடிப்படையை அறியத் தருகிறது. இதனையே பாவாணர் உள்வாங்கி திருமணச் சடங்கு பற்றிய புதிய கொள்கையை வகுத்துள்ளார். அந்த வகையில் பாவாணர், தமிழ்ச் சமூகச் சூழலுக்கேற்ற தமிழர் வழக்கான தாலி கட்டுச் சடங்கே "திருமணம்" என்னும் கருத்தை வலியுறுத்துவதை இனம் காணலாம். எனவே தாலி கட்டும் அதாவது மங்கல நாண் பூட்டும் சடங்கு பண்டைத்தமிழ் உலகிலேயே வழக்கில் இருந்தது என்பதை உணர முடிகிறது. சங்க காலத்தில் பேகன் இரவலர்க்கு எல்லாப் பொருட்களையும் ஈந்தான் என்பதனை 'ஈகை அரிய இழையணி மகளிரொடு சாயின்றென்ப ஆ அய் கோயில்' என்று புலவர்

பாராட்டுகிறார். இதில் 'ஈகையரிய இழை' என்பது ஈய இயலாத தாலியென்று ம.பொ.சி, வீரபத்திரன் முதலிய அறிஞர்கள் பொருள் கொண்டு தாலி கட்டும் வழக்கம் இருந்தது என்பதை உறுதி செய்கின்றனர். இக்கருத்தில் முரண்படுபவர்களும் உள்ளனர். ஆனால் பாவாணர் திருமணத்தைத் 'தாலிகட்டுச் சடங்கு' எனக் குறிப்பிட்டு தாலிகட்டிக் கொள்வதே தமிழர்களின் திருமணச் சடங்கு என்னும் கொள்கையை வலியுறுத்தியுள்ளார். இன்றும் கூட நாட்டுப்புற பாமர மக்கள் திருமணத்தைக் 'கட்டுதல்' என்றே குறிப்பிடுவதைக் காண முடிகிறது. 'கால் கட்டு' என்னும் சொல்வழக்கு திருமணத்தையே குறிக்கிறது. "கட்டாதவன், கட்டாதவள், கட்டுப்பட்டவள், கட்டினவன், கல்யாணம் கட்டியாச்சி" முதலிய சொற்றொடர்கள் திருமணச் சடங்கை 'கட்டு' எனும் சொல்லால் குறிப்பிடப்படுவதற்குச் சான்றாக அமைகின்றன. இச்சொல், தாலி, மங்கல நாண் என்னும் சொல்லாக்கங்களுடன் தொடர்புடையது. இத்தொடர்பினால் தாலி கட்டும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடமே இருந்திருக்க வேண்டும். இக்கருத்தாக்கப் பின்னணியிலேயே பாவாணர், தமிழ்ச் சமூகச் சூழலில் திருமணம் என்பது தாலி கட்டுச் சடங்கே அது கரணம் எனப்படுகிறது என்னும் கொள்கை முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்பது அறியத்தக்கது. மேலும் திருமணம் செய்துகொண்ட கணவன் - மனைவியை வாழ்க்கைத் துணைவன் - வாழ்க்கைத் துணைவி என பாவாணர் குறிப்பிடுகிறார். இது திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் மனைவியை வாழ்க்கைத் துணைவி' எனக் குறிப்பிட்ட கருத்தினடிப்படையில் கொள்கையாக்கிக் கொண்டமை புலனாகிறது. இதன்மூலம் பாவாணரின் திருமணம் குறித்த கருத்தாக்கத்தையும் மனித வாழ்க்கைக்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பையும் விளங்கிக் கொள்ள முடியும்.

### *பண்டைத் தமிழர் திருமணச் சடங்குகள் - பாவாணரின் கொள்கைகள் :*

பண்டைத் தமிழர்களின் திருமணச் சடங்குகளைத் தொடக்க காலத்தில் மணமக்கள் தொடர்புடைய பெரியோர்களே நடத்தி வைத்தனர். காலப்போக்கில் அந்தணர்கள் தமிழ்கூறும் நல்லுலகில் குடியேறத் தொடங்கியபின் குலத்தலைவர்கள் செய்து வைத்த திருமணச் சடங்குகளை அந்தணர்கள் செய்யத் தொடங்கினர். கிறித்துவுக்கு முன்பு வரை குறைந்த அளவு வந்த அந்தணர்கள், கி.பி. 3ம் நூற்றாண்டிற்குப் பின், பல்லவ அரசர் காலத்தில் பெருவாரியாக வந்து குடியேறினர் என்பது பாவாணரின் முடிவு. இதனை

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட" (சிலம்பு)

என்னும் சிலப்பதிகார அடிமூலம் அறியமுடிகிறது. இது பிராமண அல்லது ஆரியப்பார்ப்பனப் புரோகிதத்தைக் குறிப்பது ; கடைச் சங்கக் காலத்தில் நகரங்களிலும் மாநகரங்களிலும் பெரும்பாலும் அரசரிடையும் வணிகரிடையும் இருந்த நிலையைத் தான் குறிக்கும். இன்றும் பிராமணரில்லாத பல நாட்டுப்புறத்தூர்கள் இருப்பதாலும் சில தமிழ்க் குலத்தார் பிராமணப் புரோகிதமன்றி தம் மணங்களை நடத்திக் கொள்வதாலும் பிராமணர் வந்தபின்பும் கடைசி சங்கக் காலம் வரைபெரும்பாலும் தமிழர் மணங்கள் தமிழ் மரபிலேயே நடந்து வந்தன என்று அறிதல் வேண்டும் (1956:2) என்னும் பாவாணரின் கருத்தாக்கம் மூலம் தமிழர் திருமணம் நிகழ்ந்த நிகழ்த்தப்பட்டு வரும் தன்மையும் பிராமணப் பண்பாட்டின் ஆளுமையும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. பண்டைத் தமிழர்களின் திருமண முறையை உலகியற் தன்மையின் அடிப்படையில் நான்கு நிலைகளில் அடக்குகிறார் பாவாணர். இதனை அறிவதன் மூலம் பாவாணர் உணர்த்தும் தமிழர் திருமணக் கொள்கையை விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழர் திருமணம்

| கொள்முறை பற்றியது | குலமுறை பற்றியது | மணமக்கள் தொகைபற்றியது | மணமகள் நிலை பற்றியது |
|---|---|---|---|

பாவாணர் தமிழர் திருமணத்தை நான்கு வகையில் அடக்கிக் கூறும் தன்மையினை அட்டவணை மூலம் விளங்கிக் கொள்ளலாம். கொள்முறை பற்றிய திருமணம் என்பது பெண்ணைக் கொள்ளும் முறையாகும். இத்தன்மையின் அடிப்படையில் மூன்று வகைத் திருமணத்தைக் கூறுகிறார் பாவாணர்.

கொள்முறை பற்றியது

| கொடை மணம் | காதல் மணம் | கவர்வு (வன்கொள்) மணம் |
|---|---|---|

இம்மூவகைத் திருமணமும் பெண்ணைக் கொள்ளும் அடிப்படை இயல்பின் பின்னணியில் தனித்தனிவகையாகக் கொள்ளப்படுகின்றன.

கொடை மணம் என்பது மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரை மூவகை நிலையில் கேட்க, மணமகள் வீட்டார் உடன்பட்டுக் கொடுப்பது கொடை மணம்.

| | |
|---|---|
| கொடை மணம் | தானக் கொடை |
| | விலைக்கொடை |
| | நிலைப் பாட்டுக் கொடை |

இம்மூவகை நிலைகளும் மணமகளைக் கொடுக்கும் கொடை மண முறையின் இயல்பாகும். "தானக் கொடையாவது ஒருவர் தம் மகளைத் தக்க ஏழை மணாளனுக்குத் தாமே எல்லாச் செலவும் ஏற்று மணஞ்செய்து வைப்பது; விலைக் கொடையாவது, ஒருவன் தன் மகளுக்கு ஈடாக ஒரு தொகையை ஒரு செல்வனிடம் பெற்றுக் கொண்டு, அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுப்பது; விலை விற்பனை; இது கீழோரிடம் அருகி நிகழ்வது; நிலைப்பாட்டுக் கொடையாவது, ஒருவர் தம் மகளை ஒருவனுக்கு ஏதேனும் நிலைப்பாடு அல்லது அக்குத்தப் (Condition) பற்றி மனைவியாகக் கொடுப்பது, அந்நிலைப்பாடு, இத்துணைப் பரிசந்தரல் வேண்டுமென்றும் இத்துணைக் காலம் பெண்ணின் பெற்றோர்க்கு உழைத்தல் வேண்டுமென்றும் இன்ன மறச் செயலைப் புரிதல் வேண்டுமென்றும் மணமகளை இன்னகலையில் வெல்லுதல் வேண்டுமென்றும் பல்வேறு திறப்பட்டதாயிருக்கும்" (1956 :4) என்னும் கருத்து மூலம் பாவாணர் குறிப்பிடும் கொடை மணத்தின் இயல்பு பற்றிய தெளிவினையும் கருத்தாக்கத்தையும் கொள்கை முடிவையும் விளங்கிக் கொள்ள முடியும். பண்டைத் தமிழர் இலக்கியங்களில் இத்தகைய மணமுறைகள் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. ஏறுதழுவுதல் முதலிய மறச் செயலைச் செய்து மணமகன் மணமகளைப் பெற்றான்.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையிலும்
புல்லாளே ஆய மகள் (கலித்தொகை)

என்னும் கலித்தொகைப் பாடல் அடிகள் மூலம் ஏறுதழுவி வீரத்தைக் காட்டி, பெண்ணை மணந்த தன்மையை அறியலாம். இவ்வாறு வீரத்தில் சிறந்த ஆடவர்களையே பெண்கள் மணக்கும் ஏற்பாட்டுத் தன்மையை 'பாலியல் தெரிப்பு' (Sexual Selection) என்பார் டார்வின் இதனால் ஒரு குலத்தாரின் மறத்திறம் மென்மேலும் வளர்ந்து வருவதுடன் பிறக்கும் குழந்தைகளும் வீர உணர்வுடன் விளங்குகின்றன. இக்கருத்துப் பின்னணியில் ஒருகுலத்தார் தமக்குள்ளேயே நெடுகலும் மணந்து வருவதால் ஏற்படும் எச்சவியற் குறைபாட்டிற்கு ஈடுசெய்வது, ஏறுதழுவுதல் போன்ற மணமகன் மறவியல் தகுதி ஏற்பாடே என்னும்

*பாவாணரின் கருத்தாக்கம் தமிழ்ச் சமூகச் சூழலின் திருமண வாழ்க்கை பற்றிய அவரது கோட்பாட்டை உணர்த்துவதாகிறது.*

காதல் மணம் என்பது, ஓர் ஆடவனும் பெண்ணும் பெற்றோரைக் கேளாது பிறருக்கும் தெரியாது ஒருவரை ஒருவர் காதலித்து, தாமே கணவனும் மனைவியுமாக மாறி கூடிக் கொள்வதாகும். இது

காதல்மணம் < களவு / கற்பு

என இருவகைப்படுவதை இலக்கியங்கள்வழி அறியலாம் இக்களவு வெளிப்பாடு என்பது

களவு < உடன்போக்கு / அறத்தொடு நிலை

என இருநிலையில் நிகழும் மணத்தைக் குறிக்கும். அதாவது மறைவு நிலையைக் குறிக்கும். கற்பு நிலை என்பது வெளிப்படையானது. "நீ இன்னவாறு ஒழுக வேண்டும்" என மணமகள் திருமண ஆசிரியனால் கற்பிக்கப்படும் நிலை ஆகும். இவ்வாறு கற்பிக்கப்படுவதால் கற்பு நிலை எனப்பட்டது. இது பாவாணரின் திருமணக் கொள்கை வழி இனம் காணும் வாழ்வியல் உண்மையாகும்.

பண்டைத் தமிழர் இலக்கியங்கள் இக்காதல் மணம் பற்றி மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவதைத் தமிழுலகம் அறியத் தவற வாய்ப்பில்லை. இதனை நன்கு ஆய்ந்தறிந்தமையாலேயே பாவாணர் தமிழர்களின் இல்லறக் கோட்பாட்டில் திருமணத்தின் ஒரு வகையான காதல் மணம் பற்றிய தெளிவான கருத்தாக்கத்திற்கு வர முடிந்தது எனலாம். கவர்வுமணம் என்பது ஒரு பெண்ணை அவள் பெற்றோர் இசைவோ அவளது இசைவோ இல்லாமல் வலிந்து பற்றித் திருமணம் செய்து கொள்வதாகும். ஊருக்கு வெளியில் தனித்து நிற்கும் ஓர் இளம் பெண்ணை வேற்றூரான் ஒருவன் வந்து பற்றிக் கொண்டு போய் திருமணம் செய்து கொள்வதும் இவ்வகையின் பாற்படும் என்பது பாவாணரின் கருத்து. அதே நேரத்தில் "ஓர் அரசன், தன் பகையரசனை வென்று அல்லது கொன்று, அவனுடைய தேவியரைச் சிறைப்பிடித்து வந்து வேளம் என்னும் சிறைச் சாலையில் இட்டு அவமானப்படுத்துவது கவர்வு மணத்தின்பாற்படாது" (1956 : 11) என பாவாணர் கூறும் கருத்தின் மூலம் அவரது தமிழர் திருமணக் கோட்பாடு பற்றிய

தெளிவினையும் நுண்மாண் நுழைபுல ஆற்றலையும் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் தன்மையையும் இனம் காணலாம்.

குலமுறை பற்றிய திருமணம், பண்டைத் தமிழர் மணமுறைகளில் ஒருவகை என்பது பாவாணரின் கருத்து.

குலமுறை பற்றிய மணம்
- அகமணம் (Endogamy)
- புறமணம் (Exogamy)

அட்டவணை உணர்த்துவது போன்று இது இருவகைப்படும் என்பது பாவாணரின் முடிவு. "அகமணம் என்பது ஒரு குலத்தார் தம் குலத்திற்குள்ளேயே மணத்தல் புறமணமாவது ஒரு குலப் பிரிவினர் தம் குலப் பிரிவிற்குள் மணவாது வேறொரு பிரிவில் மணத்தல்" என்பதாகும். ஆயினும் அரசர்கள் பிற குலத்தில் பெண் கொண்டாலும் தம் வீட்டு மகளிரைப் பிற குலத்தார்க்குக் கொடுப்பதில்லை. இது உயர்மணத்தின் (Hypergamy) பாற்படும் என விளக்கம் தருகிறார். பாவாணரின் இத்தகைய தெளிவான ஆய்வுத் திறனையும் கருத்தாக்கத்தையும் அறியும்பொழுது, தமிழ்ப் பண்பாட்டு இல்லற நெறி பற்றி அவருக்குத் தெளிவான கொள்கை இருந்தமையும் தமிழ்ச் சமூகச் சூழலில் தமிழர்கள் பின்பற்றி வந்த திருமண முறைகள் பற்றி தீர்க்கமான கோட்பாடு கொண்டிருந்தமையுடன் தமிழர் இல்லற நெறி பற்றிய உண்மைகளை அறியத்தருவதும் பேணிக் காப்பதுமான தனித்தன்மை பெற்றிருந்தமையும் புலனாகிறது. மணமக்கள் தொகை பற்றிய தமிழ் மணத்தை மூன்றாக வகைப்படுத்துகிறார் பாவாணர்.

மணமக்கள் தொகை
- ஒரு மனையம் (Monogamy)
- பல் மனையம் (Polygamy)
- பல்கணவம் (Polyandry)

ஒரு காலத்தில் ஒரே மனைவியுடைமை ஒரு மனையம் ஆகும். இது ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர்ந்த பண்பாட்டு மரபின்பாற்பட்டது. ஒரே காலத்தில் பல மனைவியருடைமை பல்மனையம்: ஒரே காலத்தில் பல கணவருடைமை பல்கணவம் ஆகும். பாவாணரின் இத்தகைய மணமக்கள் தொகை விளக்கமும் அதன் வகைப்பாட்டை உணர்த்தும் சொல்லாட்சியும் அவரது ஆய்வு நுட்பத்திற்குச் சான்றுகளாகும்.

தனித்தமிழ்ச் சொல்லாக்கத்தில் அவருக்கு இருந்த தேர்ச்சியை இதன் வழி அறியலாம். மணமகள் நிலை பற்றி எழும் மணங்களாக மூன்றினைக் குறிப்பிடுகிறார். அவை

1. கன்னிமணம்
2. கட்டுப்பட்டவள் மணம்
3. கைம்பெண்மணம் என்பவையாகும்.

கன்னிமணம் என்பது கன்னிப்பெண் ஒருத்தியைப் புதிதாக மணப்பது. கட்டுப்பட்டவள் மணம் என்பது ஒருமுறை மணக்கப்பட்டுத் தீரப்பட்டவளை மணத்தல் ஆகும். இது சிறப்பில்லாததாகக் கருதப்படுவதால் இதில் மணமுழா (கலியாண மேளம்) இன்றியே தாலி கட்டப்படுவதுண்டு. அது கட்டுத்தாலி என அழைக்கப்படும். மணமுழவு உள்ள திருமணம் கொட்டுத் திருமணம் எனப்படும். கைம்பெண் மணம் என்பது கணவனை இழந்தவளை மணம் செய்வது. இது பெரும்பாலும் கட்டுத்தாலியாகவே இருக்கும். தமிழர் திருமண முறைகள் பற்றிய தெளிவான நுட்பமான கருத்தாக்கங்களைப் பாவாணர் கொண்டிருந்தமையும் தமிழ்ச் சமூகச் சூழலில் திருமணச்சடங்கு பற்றிய வழக்கு நிலையையும் மேற்கூறப்பட்ட கருத்துகள் வழி விளங்கிக் கொள்ளலாம்.

***பாவாணரின் இல்லறக் கோட்பாடுகளும் சீர்திருத்த முயற்சிகளும் :***

தமிழர்களின் இல்லற வாழ்வில் ஆரியப் பண்பாட்டுக் கலப்பினால் ஏற்பட்ட தாக்கத்தைப் போக்கி பண்டைத் தமிழ் மரபைப் பேணும் வகையில் பல சீர்திருத்தச் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார் பாவாணர். இச்சீர்திருத்தக் கருத்துக்களை ஆராய்வதன் மூலம் அவர் அடையாளம் காணும் தமிழர் இல்லறக் கோட்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும். அந்த வகையில் தமிழர் திருமணத்தை சீர்திருத்த மேற்கொண்ட முயற்சிகளைப் பட்டியலிடுவது அவசியம்.

1. சீர்திருத்த இயக்கங்களின் முயற்சிகள்
2. பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவை
3. மணமக்கள் கவனிக்க வேண்டியவை
4. உற்றார் உறவினர் கவனிக்க வேண்டியவை
5. அரசியலார் கவனிக்க வேண்டியவை
6. புதிய வழக்கங்கள் புகுதல்
7. போலிச் சீர்திருத்த மணங்கள்
8. பெண்டிர் சமத்துவம் ஏற்படாமை

முதலிய எண்வகைக் கூறுகளைக் கூறி தமிழர் திருமணத்தில் சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்கிறார் பாவாணர். இவற்றை விளக்குவது பாவாணர் கண்ட இல்லறக் கோட்பாட்டுத் தெளிவிற்கு வழிவகுக்கும்.

இடைக்காலத்தில் தமிழ் மரபிற்கொவ்வாத பல ஆரிய முறைகளும் சடங்குகளும் தமிழ் மணங்களிற் கலந்து விட்டதனாலும் அவற்றால் தமிழுக்கும் தமிழருக்கும் பல தீமைகள் விளைந்ததினாலும் அவற்றைக் களைந்து தமிழ் மணத்தைத் திருத்துதற்குப் பல தலைவர்கள் தோன்றினர். அவர்களுள் முதன்மையான நால்வரை அடையாளம் காட்டுகிறார் பாவாணர். அவர்கள் சித்தூர் மார்க்கசகாய ஆச்சாரியார், மறைமலையடிகள், திரு.வி.க., ஈ.வே. இராமசாமிப்பெரியார் ஆகியோராவார். இவர்கள் தமிழ்ச் சமூகச் சூழலில் ஆரியப் பண்பாடு கலந்தமையை இனம் கண்டு சீர்திருத்திய தன்மையினைப் பாவாணர் அடையாளம் காட்டுகிறார். இதன்மூலம் பாவாணருக்கு இருந்த அறிஞரைப் போற்றும் நெறியும் தமிழர் பண்பாட்டைப் பேணிகாக்கும் சீர்திருத்த உணர்வுப் புலனாகின்றன.

மணமக்கள் பெரும்பாலும் உலகியலறியா இளமையராதலானும் மணவாழ்க்கை ஆயிரங்காலத்துப் பயிராகலானும் இளமை எளிதாய் உணர்ச்சிவயப்பட்டுக் கெட்டு விடுதலானும் திருமணப் பொறுப்பை முற்றும் மணமக்களிடத்தில் விட்டு விடாது, பெற்றோர் முற்படவே விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருந்து பன்னிரு கடமைகளை ஆற்ற வேண்டுமெனக் குறிப்பிடுகிறார் பாவாணர். அவை, பால்நிலைகவனித்தல், பன்னிரு பொருத்தம் பார்த்தல், குலவெறி கொள்ளாத்தன்மை, பரிசம் வாங்காமை, நாளும் வேளையும் பாராமை, பிறப்பியம் (ஜாதகம்) பாராமை, மணம் பற்றிய திட்டமான செய்திகளை முடிவு செய்து கொள்வது, தாய்மொழியில் கரணம் (சடங்குகள்) செய்வித்தல், வீண் சடங்குகளை விலக்குதல், செல்வ நிலைக்கேற்பச் செலவு செய்தல், மண நாளன்றே மணமக்களைக் கூட்டுதல், மணமக்களின் நல்வாழ்வை விரும்புதல் ஆகியவையாகும். இவற்றைச் செயற்படுத்தும்பொழுது தமிழர் திருமண முறை ஆரியக் கலப்பற்ற தமிழ்ச் சமூகச் சூழலுக்கேற்ற முறையாக மறுமலர்ச்சி பெறும் என்பது அறியத்தக்கது. பால்நிலையைக் கவனித்தல் என்பது ஆண் ஆண்தன்மை உடையவன் தானா? பெண் பெண்ணியல்பு உள்ளவளா? பிள்ளை பெற்றெடுக்கும் தகுதி உடையவளா? என்பதை அறிந்து மணம் செய்து வைக்கும் பெற்றோரின் கடமையைக் குறிக்கும்.

பன்னிரு பொருத்தம் பார்த்தல் என்பது மண மக்களின் பெற்றோர் பார்க்க வேண்டிய முக்கிய செயலாகும். இப்பொருத்தங்களைப் பார்த்து அவற்றில் பெரும்பகுதி பொருந்தும் மணமக்களை இணைப்பதே இனிய இல்லறத்திற்கு வழிவகுக்கும் என்பது தமிழர் திருமண நெறியாகும். அந்த வகையில்,

1. காதற் பொருத்தம்
2. உடல் நலப்பொருத்தம்
3. ஒழுக்கப் பொருத்தம்
4. கருத்துப் பொருத்தம்
5. உண்டிப் பொருத்தம்
6. அகவைப் பொருத்தம்
7. உருவப் பொருத்தம்
8. கல்விப் பொருத்தம்
9. முறைப் பொருத்தம்
10. வினைத்திறப் பொருத்தம்
11. தொழிற் பொருத்தம்
12. குடும்ப நிலைப் பொருத்தம்

என்னும் பன்னிரு பொருத்தங்களைக் குறிப்பிடுகிறார் பாவாணர். இது ஜோதிடக்கலை உணர்த்தும் திருமணப் பொருத்தங்களுடன் பொருத்திப் பார்க்கத் தக்கது. ஜோதிடக்கலை உணர்த்தும் திருமணப் பொருத்தங்களை,

திருமணப் பொருத்தம்
- ஸ்தூலப் பொருத்தம் (Detective Methods)
- சூட்சுமப் பொருத்தம் (Indective Methods)

அட்டவணை உணர்த்துவது போன்று இருவகைப்படுத்தலாம். அவற்றை இனம் காண்பது அவசியம். ஸ்தூலப் பொருத்தத்தில் முதல் பத்து பொருத்தம் (தலப் பொருத்தம்) மிக முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை

1. தினப்பொருத்தம்
2. கணம் (ஆயுள்) பொருத்தம்
3. யோனி பொருத்தம்
4. இராசிப் பொருத்தம்
5. இராசியதிபதி பொருத்தம்
6. மகேந்திரப் பொருத்தம்

7. வசியப் பொருத்தம்

8. நாடிப் பொருத்தம்

9. வேதை பொருத்தம்

10. ரஜீஜ் (சரடு / மாங்கல்யம்) பொருத்தம்

என்பவையாகும். அதோடு (1) தசாசந்தி (குசா விடுதலை) (2) செவ்வாய் தோச சந்தி சாம்யம் (3) பாப தோச சாம்யம் என்னும் கூறுகளும் அறியத்தக்கது. ஜோதிடகலை உணர்த்தும் இப்பொருத்தங்களுடன் பாவாணர் குறிப்பிடும் பன்னிரு பொருத்தங்களும் ஒப்பிட்டு ஆராயத்தக்கது. இவ்வொப்பீடு மூலம் ஜோதிடக்கலை பொருத்தங்களை பாவாணர் கண்ட பொருத்தங்கள் விஞ்சி நின்று அறிவார்ந்த நிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளன.

"தேசானுகூல ரூபேண வயோ
வர்ணானுசாரஹ ஜாதகஸ்ய பலம்"

என்னும் சுலோகம் உணர்த்தும் கருத்தினடிப்படையில் தேசம், வடிவம், பழக்கவழக்கம், காலத்திற்குத் தக்க பல்வேறு வகையில் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டுமென காளிதாசரின் 'சாதக சந்திரிகை' நாரதீயம், காலவிதானம் முதலிய ஜோதிடக் கலை நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பொருத்தங்களுக்கும் பாவாணரின் பன்னிரு பொருத்தங்கள் தன்மைக்கும் மிக நெருங்கிய கருத்தொற்றுமை இருப்பதை ஒப்பிட்டு இனம் காணலாம்.

ஸ்தூலப் பொருத்தத்தைத் தொடர்ந்து, சூட்சுமப் பொருத்தமும் உள்ளன. அவை 12 இராசிகள் அவைகளுக்குரிய பாவங்களை இனம் கண்டு அவைகள் வழி பொருத்தம் பார்க்கும் தன்மையாகும். இதனை, ஆதீமப் பொருத்தம் என வழங்குவர் ஜோதிட கலைஞர்கள், இவர்கள் உணர்த்தும் பொருத்தங்களைப் பார்ப்பதைவிட பொருத்தம் பார்க்காது திருமணம் செய்து கொள்வதே சாலச் சிறந்தது. காரணம் பாவாணர் சுட்டும் பன்னிரு பொருத்தங்களும் ஜோதிடக்கலை பொருத்தங்களை உள்வாங்கி அறிவார்ந்த நிலையில் மாற்றி, பின்பற்றத்தக்க வகையில் புதுமையாக வடிவம் பெற்றவையாகும்.

# வைத்தியநாதரின் வினைச்சொற்கள்

பேராசிரியர் பெ. சுயம்பு
ஆதித்தனார் கலைக்கல்லூரி, திருச்செந்தூர்

திருவாரூர் வைத்தியநாத நாவலர், வைத்திய நாத தேசிகர் என்னும் பெயருக்கும் உரியவர். பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் ஆழ்ந்து அகன்ற புலமையாளர், பல இலக்கிய பனுவல்களைப் படைத்தவராயினும் இவர் யாத்த இயக்கண விளக்கம் என்னும் இலக்கண நூலே இவரைத் தமிழ் இலக்கிய உலகில் புகழுடன் நிலைக்கச் செய்தது.

## இலக்கண விளக்கம்

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்கள் புதிய நெறியில் இழுத்துச் சென்றன. வீரசோழியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் ஒத்த தகுதியுடன் கருதி, ஐந்து அதிகாரங்களில் விவரிக்கிறது. இந்நூல் அயல் மொழியாளர்கள், குறிப்பாக வடமொழியை அறிந்தோர் தமிழை அறிந்து கொள்ளுமாறு வடமொழிக் கலைச்சொற்களை விரவி இலக்கணக் கருத்துக்களை விளக்கும் நோக்கம் கொண்டது. எனவே இதில் தமிழ் மரபு முழுமையாகப் பேணப்படவில்லை. வீரசோழியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நேமிநாதம் தொல்காப்பியம் என்னும் பெருங்கடலை நீந்திக் கரைசேர்தற்கென இயற்றப்பட்டது. எனினும் இந்நூல் தமிழ் இலக்கணத்தைப் பெரிதும் சுருக்கிக் கூறுதலால், சின்னூல் என்னும் பெயருக்கு உரியதாகியது. இதன் வாயிலாகத் தமிழ் இலக்கணத்தை விளக்கமாக அறிதல் இயலாது. மேலும், இந்நூல் எழுத்து, சொல் என்னும் ஈரிலக்கணங்களை மட்டுமே விவரிக்கிறது. பொருளிலக்கணம் இதன்கண் இடம்பெற வில்லை. பின்னாளைய நூல்களுள் நன்னூல் தமிழ் இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லி, விளங்க வைக்கிறது. இந்நூல் ஐந்திலக்கணங்களையும் உள்ளடக்கியது என்னும் செய்தி இதன் பாயிரத்தில் காணப்படுகிறது. எனினும் எழுத்தும் சொல்லும் தவிர்ந்தவை கிடைக்கப்பெறவில்லை. எனவே ஐந்திலக்கணங்களையும் தமிழ் மரபைப் பேணுகிற தொல்காப்பியத்தின் வழியில் விவரிக்கும் நோக்கில் வைத்தியநாத நாவலர் இலக்கண விளக்கத்தினை இயற்றினார்.

தமிழ் இலக்கண நூல்கள் செறிவுடன் சில சொற்களில் நூற்பா வடிவில் எழுதப்பெற்றன. எனவே அவற்றை விளக்கிக் காட்டும்

பொருட்டு அறிஞர்கள் வெவ்வேறு காலத்தில் தம் புலமைக்கும் தம் கால மொழி வழக்கத்திற்கும் ஏற்ப உரை விளக்கம் எழுதலாயினர். இவ்வுரை விளக்கங்கள் 'முதல் நூலாசிரியரின் கருத்தை உள்ளவாறு புலப்படுத்தாது' என்னும் குறை அறிஞர்களிடம் அலை பாய்ந்தது. இக்குறையை நீக்குமாறு நாவலர் தம் நூற்பாவுக்கு உரையினையும் எழுதினார். இதன்வழி, தமிழில் தம் (மூல) நூலுக்கு உரை எழுதியவருள் முதல்வர் என்னும் பெருமைக்கும் நாவலர் உரியவ்ரானார்.

### *வினைச்சொல் - வரைவிலக்கணம்*

வைத்தியநாதர் வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தினை,

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலை காலமொடு தோன்றிப்
> பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப் பதுவே

என்னும் நூற்பாவில் (227) விளக்குகிறார்.

வைத்தியநாதரின் வினைச்சொல் குறித்த இவ்விளக்கம்,

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

என்னும் தொல்காப்பியனாரின் விளக்கத்தையும் (தொல், சொல் 200) சேனாவரையர் (தொல், சொல்158) வரைந்த 'பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில்' என்னும் விளக்கத்தையும் இணைத்துக் கூறப்பட்டதாகும்.

தொழில்களுள் இருத்தல், நிற்றல், கிடத்தல் போல்வன புடைபெயர்ச்சி (இயக்கம்) இல்லாதன. எனினும் இவை போன்ற சில ஒழிந்த பெரும்பான்மையான புடைபெயர்ச்சி உடையனவாதலின் நாவலர் இவ்வாறு வரைவிலக்கணம் கூறியுள்ளார்.

### *வினைச்சொல் - வகைப்பாடு*

வைத்தியநாதரின்வினைச்சொல்லின் வகைப்பாடு நன்னூலைத் தழுவிக் காணப்படுகிறது. இதில் ஐந்து அணுகுமுறைகள் ஊடுருவியுள்ளன. வினை, வினைக்குறிப்பு என்பது ஒருவகை. இவ்வகைப்பாடு வினைச்சொல்லின் இயல்பு புலப்படும் முறையை ஒட்டியது. உயர்திணை வினை, அஃறிணை வினை, பொதுவினை என்னும் முக்கூற்றுப் பகுப்பு இரண்டாம் வகை. ஆண்பால் வினை, பெண்பால் வினை, பலர் பால் வினை, ஒன்றன் பால் வினை,

பலவின்பால்வினை என்னும் ஐங்கூற்றுப் பகுப்பு மூன்றாம் வகை. இவ்விரு வகைப் பகுப்புக்களுள் திணை என்பது பெருந்தொகுதி அடிப்படையிலும் பால் என்பது அத்தொகுதியுள் அடங்கும் உட்பிரிவுகள் அடிப்படையிலும் ஆனவை. இங்குத் திணை என்னும் சொல் ஒழுக்கத்தைக் குறிக்கவில்லை. அவ்வாறே பால் என்ற சொல்லும் பாலினத்தை உணர்த்தவில்லை; அது வகை என்னும் பொருளை உணர்த்துகிறது. நான்காம் வகைப்பாடு சொல் வழங்குகிற சூழலை ஒட்டியது. சொற்களைப் பேசுகிறவன் தன்மை, கேட்கிறவன் முன்னிலை. பேசப்படும் பொருள் படர்க்கை, இவற்றை இலக்கண நூல்கள் மூவிடம் என்று கூறுகின்றன. மூவிட அடிப்படையில் தன்மைவினை, முன்னிலைவினை, படர்க்கை வினை என வினைச்சொற்கள் மூன்றாக வகைப்படுத்தப் படுகின்றன. ஐந்தாவதாக வினைச் சொற்கள் வினையின் (தொழிலின்) இருப்புநிலை (முடிவு அல்லது முடிவுபெறாமை) அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

**தன்மை வினை**

இலக்கணம் மனிதர்கள் வழங்குகிற மொழியின் கட்டமைப்பினை விவரிக்கிறது. மனிதர்களே ஒருவரோடு மற்றவர் பேசி உரையாடும் திறனுடையோர் இதனாலேயே தொல்காப்பியனார் தன்மையை உயர்திணைக்குரிய சொல்லாக வகைப்படுத்தியுள்ளார். ஆனால் வைத்திய நாவலர் தன்மைச் சொற்களை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக உரிமையுடையனவாகக் கருதுகிறார். இவரது பொது வினைகளுள் தன்மை வினைகளும் அடங்கும்.

தொல்காப்பிய இலக்கண நெறியை மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கமே இலக்கண விளக்கம் தோற்றுவதற்கான முதன்மைக் காரணம் என்பது நாவலரின் எண்ணம். இதனாலேயே அவர் நன்னூல் நூற்பாக்களைப் பேரளவில் எடுத்துக் கொண்டு, நன்னூலின் நூலமைப்பு முறையைத் தழுவியுள்ள போதினும், உரையின் வாயிலாகத் தொல்காப்பியச் செய்திகளை விரிவாக எடுத்துரைக்கிறார். ஆயினும், ஆங்காங்கே தொல்காப்பியத்தினின்று முரண்பட்ட கருத்துக்களையும் புதுமையாகத் தம் நூலில் இணைத்துள்ளார். அவ்வாறு இணைக்கப் பெற்றவற்றுள் ஒன்றே தன்மைவினையைப் பொது வினைப்பட்டியலில் அடக்கியிருப்பது. இங்கு நாவலர் நன்னூலைத் தழுவியுள்ளார்.

தன்மைவினையைப் பொதுவினைகளுள் ஒன்றாகக் கொண்டமைக்கு வைத்தியநாதர் தரும் விளக்கமும் புதியதன்று. அஃறிணைப் பொருட்களும் பேசுவன போலச் செய்யுளிலும்

கதைகளிலும் புனைந்துரைக்கப்படுதலைக் கருத்திற் கொண்டு, அவற்றுக்கும் உரியனவாகத் "தன்மைச் சொற்கள் பொதுவினைப் பட்டியலில் சேர்க்கப்பெற்றுள்ளன என்பது நாவலரின் விளக்கமாகும். இவ்விளக்கம், தன்மை உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கு முரித்தாமோ வெனின், "பேய்பூத மந்தி கிளிபூவை பேசுதலா, லாகுமே தன்மை பொது" என்பதனால், ஆமென்க" மயிலை நாதரின் நன்னூல் (284) உரைப்பகுதியைத் தழுவியதாகும்.

*முற்றுவினை*

வைத்தியநாதர் வினைச் சொற்களுள் தரும் விளக்கங்களுள் முற்று வினைக்குத் தருதலும் குறிப்பிடத்தக்கது.

> மற்றுச்சொன் னோக்கா மரபின வனைத்து
> முற்றி நிற்பன முற்றியன் மொழி ... (இ.வி. 230)

வேறு எச்சொல்லையும் துணைக்கு ஏற்காது, தன்னளவிலேயே செயல் நிறைவு பெறுதலை உணர்த்துவது முற்றுவினைச் சொல் என்பது முற்று வினைச் சொல்லுக்கான விளக்கமாகும். இவ்விளக்கம் தொல்காப்பியம், நன்னூல் ஆகியன தரும் விளக்கத்தினும் தெளிவுநிறைந்தது. இதனையும் நாவலர் மயிலைநாதரிடமிருந்து பெற்றுள்ளார். "முற்றி நிற்றலான் முற்று; "மற்றுசொன் னோக்கா மரபின வனைத்து, முற்றி நிற்பன முற்றியன் மொழியே' என்றார், அகத்தியனார்" என்பது மயிலைநாதரின் (நன்னூல் 322) உரைப்பகுதி. அகத்தியனாரின் வேறு சில நூற்பாக்களையும் நாவலர் இலக்கண விளக்கத்தில் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். எனவே முற்று வினைகுறித்த இந்நூற்பாவை நாவலர் அகத்தியத்திலிருந்து ஏற்றுள்ளார் எனவும் கூற வாய்ப்புளது.

*ஏவல் வினை*

முன்னிலை வினைகளை வைத்தியநாதர் (இ.வி.238) முன்னிலை வினை, ஏவல் வினை என இரண்டாகப் பகுத்து விளக்குகிறார். தொல்காப்பியத்தில் இத்தகைய பகுப்பு இடம்பெறவில்லை. நன்னூல் 'மின்' விகுதியை ஏவலுக்கு உரியது எனக் குறிப்பிடுகிறது. ஆனால் நச்சினார்க்கினியர் (தொல். சொல். 226) இப்பகுப்பினை மேற்கொண்டுள்ளார். எனவே வைத்தியநாதருக்கு நச்சினார்க்கினியர் இங்கு முன்னோடி எனலாம்.

வைத்தியநாதர் (இ.வி. 50,238,353) அல், ஆல், ஏல், காண் விகுதிளைப் பெற்ற சொற்களும் செய், செய்வி வாய்பாட்டு

வினையடிகளும் (பகுதிகளும்) ஏவல் ஒருமை வினையாகவும் மின், உம் விகுதிகளைப் பெற்ற சொற்கள் ஏவற்பன்மை வினையாகவும் வருதலைக் கூறுகிறார். மேலும், 'செய்யாய்' வாய்பாட்டுச் சொற்கள் படுத்தல் ஓசையுடன் ஒலிக்கப்படும்போது உடன்பாட்டு ஏவலாகவும் எடுத்தல் ஓசையின்போது எதிர்மறை முன்னிலையாகவும் வழங்குதலையும் கூறுகிறார். இவ்விலக்கணத்திற்குப் பின்வரும் சான்றுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

எ–டு. உண்ணல் மறால் அழேல் சொல்லிக்காண்

அறியாய் – படுத்தலோசை – உடன்பாட்டு ஏவல்
அறியாய் – எடுத்தலோசை – எதிர்மறை முன்னிலை.

எடுத்துக்காட்டுக்களுள் அல், ஆல், ஏல் விகுதிச்சொற்கள் எதிர்மறை ஏவல்களாக வருகின்றன.

அழியல் (தொல், பொருள் 144)
கொள்ளல் (நற்றிணை 290)
அழாஅல் (குறுந்தொகை 82)
கொள்ளேல் (மணிமேகலை. 20.122)

காண் என்பது வினைச் சொல்லாகும். இது இங்குத் துணை வினையாகச் 'செய்து' என்னும் வாய்பாட்டு எச்சச் சொற்களுடன் இணைந்து ஏவற் பொருளை உணர்த்துகிறது. இவ்வாறு துணை வினைகள் ஏவலில் வருதல் தமிழில் பெரு வழக்காகும். சொல்லிக்காட்டு, வந்துபார், செத்துத் தொலை, எடுத்துக்கொள் என்பன போல்வன இத்தகையன.

நாவலர் கூறும் ஏவற்பன்மைச் சொற்களுள் 'உம்' விகுதி பெற்றவை தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் கூறப்பெறாதவை. இவை தொல்காப்பிய உரைகளிலும் வீரசோழியத்திலும் இடம்பெற்றுள்ளன. இச்சொற்களை வீரசோழியம் சிறப்பு ஏவல் எனக் குறிப்பிடுகிறது. மரியாதை ஒருமையினையே இந்நூல் சிறப்பு எனக் கூறுகிறது. ஒருவரை மரியாதையின் பொருட்டு வாரும், செல்லும், சாப்பிடும் என்று கூறுதல் தற்கால வழக்கிலும் உளது.

***வியங்கோள் வினை***

வைத்தியநாத நாவலர் க, ய, ர், அல், ஆல், உம், மார், ஐ விகுதிகளைப் பெற்ற சொற்கள் விதித்தல், வேண்டிக் கோடல், வாழ்த்தல் முதலிய பொருளில் வியங்கோளாக வழங்குதலைக் குறிப்பிடுகிறார். மேலும், அல் விகுதிச் சொற்கள் உடன்பாடு, எதிர்மறை எனும் இருநிலைகளில் வருதலையும் சுட்டுகிறார்.

எ—டு மக்கட் பதடி யெனல் – உடன்பாடு
மகனெனல் – எதிர்மறை

'வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்'

வைத்தியநாதர் எடுத்துக்காட்டியவற்றுள் 'வேண்டும்' என்னும் சொல் வேண்டிக் கோடற் பொருளில் வியங்கோளாக வருகிறது. ஆனால் அவரோ இச்சொல்லில் உள்ள உம் விகுதியே வியங்கோளை உணர்த்துகிறது எனக் கூறுகிறார்.

***வினையெச்சம்***

தொல்காப்பியம் செய்து, செய்பு முதலிய வாய்பாட்டு வினையெச்சங்களையும் பெயரெச்சங்களோடு பின், முன் முதலிய சொற்கள் இணைந்து அமையும் கூட்டு வினையெச்சங்களையும் விவரிக்கிறது. இலக்கண விளக்கம் இவற்றுடன் செய்வான், செய்பான், செய்பாக்கு வாய்பாட்டுச் சொற்களையும் இ, ய், ஆல் விகுதி பெற்ற சொற்கள்; செய்யாது, செய்யாமல், செய்யாமை வாய்பாட்டு எதிர்மறைச் சொற்கள் ஆகியவற்றையும் சேர்த்து விளக்குகிறது. இவற்றுள் செய்வான், செய்பான், செய்பாக்கு மூன்றும் நன்னூலிலும் ஏனையவை நச்சினார்க்கினியர் உரையிலும் இடம் பெற்றுள்ளவையாகும்.

வைத்திய நாத நாவலர் தமிழ் மரபை மீண்டும் நிலை நிறுத்தற்பொருட்டு இலக்கண விளக்கம் என்னும் ஐந்தமிழ் நூலை யாத்தார். அதில் வினைச்சொல் இலக்கணம் பலவாறு வகைப்படுத்தி விவரிக்கப்பட்டுள்ளது. அவ்விலக்கணத்திற்கு அடிப்படையாகத் தொல்காப்பியம், நன்னூல் என்னும் நூல்களும் சேனாவரையர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் ஆகியோரின் உரை விளக்கங்களும் அமைந்துள்ளன. உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியரின் கருத்துக்களையே நாவலர் பெரிதும் தழுவியுள்ளார்.

# இராமர் பாலமா?.....

ஆதி. பாலசுந்தரன்,

தனிநிலை ஆய்வர். திருவிதாங்கூர் பல்கலைக்கழகம்

## 01 : முன்னுரை

தனுக்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே கடலில் தெரியும் தொடர் இராமர் பாலமா? புவியியல் அமைப்பு மாற்றங்களால் ஏற்படும் சுண்ணாம்பு, பவளப் பாறைத் தொடரா? என்பதை மட்டும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். இலக்கியம், புராணச் சான்றுகள் அடிப்படையில் மட்டுமே எழுதப்படுகிறது.

## 02 : சங்க இலக்கியம் கூறுவது

இராமேச்சுரத்தில் இராமபிரான் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்து வழிபட்ட செய்தியைப் புறநானூறு (பா : 378) கலித்தொகை (பா : 38) இரு சங்க நூல்களும் குறிப்பிடுகின்றன.

தனுக்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையில் இராமபிரான் பாலம் அமைத்தான் எனச் சொல்லவில்லை.

## 03 : தேவாரப் பாடல்கள் கூறும் செய்தி

(1) "குன்றுபோல் தோளுடைய குணம்இலா அரக்கர் தம்மைக்
கொன்று போர் ஆழி அம்மால் வேட்கையால்செய்த கோயில்"

(2) "வரைகள் ஒத்தே உயர்ந்த மணிமுடி அரக்கர் கோனை
விரையமுற்ற ஒடுக்கி மீண்டுமால் செய்த கோயில்"

எனத் திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

இவ்வடிகளிலும் 'பாலம்' கட்டியதாகச் சொல்லவில்லை.

## 04 : பாவநாசத்தல புராணம்

இராமபிரான் இராவணனைக் கொன்று இலங்கையிலிருந்து மீண்டு வருங்கால் கொன்ற பாவம் நீங்க, தஞ்சை மாவட்டம் பாவநாசம் குடமுருட்டி ஆற்றங்கரையில் நூற்றெட்டுச் சிவலிங்கங்களை நல் இருப்புச் செய்து வழிபட்டதாகப் பாவ நாசத் தல புராணம் கூறுகிறது.

இலக்கியமும் புராணமும் இராமபிரான் இலங்கையிலிருந்து மீண்டு 'வந்த' செய்தியையே கூறுகின்றன.

பாலம் அமைத்துச் 'சென்ற' தாகச் சொல்லவில்லை.

## 05 : கம்பர்

இராமபிரான் இராமேச்சுரத்தில் சிவலிங்கத்தை நல்லிருப்புச் செய்து வழிபட்ட செய்தியைக் கம்பர் தமது இராமாயணத்தில் குறிப்பிடவில்லை.

ஆனால் "ஆயிரம் நாமத்து அண்ணல் தன்னையே வணங்கி வாழ்த்தி" – என இராமபிரான் சிவனை வணங்கி வாழ்த்தியதைக் கூறுகின்றார்.

## 06 : சோதிர்லிங்க தோத்திரம் கூறுவது

"தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில், எண்ணற்ற அம்புகளைக் கொண்டு அணையைக் கட்டிய இராமபிரான் பிரதிட்டை செய்து பூசை செய்த இராமேச்சுரம் என்னும் சிவலிங்கத்தை நான் முறைப்படி வணங்குகின்றேன்" எனப் பன்னிரு சோதிர்லிங்க தோத்திரம் என்னும் சமஸ்கிருத நூல் கூறுகிறது.

## 07 : அணை கட்டிய விதம்

இத்தோத்திரத்தில் கவனிக்க வேண்டிய செய்தி: இராமபிரான் அம்புகளைக் கொண்டு கட்டிய 'அணை' என்றுதான் சொல்லப்படுகிறது. கட்டியது 'பாலம்' என்று சொல்லவில்லை. இலங்கை பற்றிய குறிப்பும் இல்லை

'அம்பு'களால் அணைகட்டியதாகச் சொல்லப்படுகிறது. கற்களையோ, பிற கலவைகளையோ கொண்டு பாலம் கட்டியதாகச் சொல்லவில்லை.

## 08 : கட்டிய இடம் எங்குள்ளது?

இராமபிரான் அம்புகளால் அணையைக் கட்டியதாகச் சொல்லும் இடம், தாமிரபரணி என்னும் பொருநையாறு கடலோடு கலக்கும் இடம்.

அந்த இடம் கொற்கை. இப்போது தூத்துக்குடி மாவட்டத்தில் ஆற்றூர் என்னும் ஊரின் அருகில் உள்ளது.

இராமேச்சுரத்தில் தாமிரபரணி ஆறு கடலோடு கலக்கவில்லை.

## 09 : இலங்கையும் தாமிரபரணியும்

"குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையில் உள்ள பெருவள நாடே பழந்தமிழ் நாடாகும். இது பெரியதொரு ஆற்றிடைக் குறை ஆகலின், இதற்கு 'அலங்கம்' என்று பெயர்.....

...அலங்கம் – லங்கா – இலங்கை ஆயிற்று. அலங்கம் எனினும் ஆற்றிடைக்குறை எனினும் ஒக்கும்....

.....இலத்தீன் மொழியில் இலங்கைக்கு டாப்ராபேன் என்று

பெயர். 'டாப்ராபேன்' என்பது தாமிர பரணி என்பதன் சிதைவு.....

.....கடல் கோளுக்கு உட்படாமுன் இலங்கைக்கு இப்பொழுது தென்பாண்டி நாட்டில் ஓடும் தாமிரபரணி பாய்ச்சல் இருந்தமையால் அப்பெயர் பெற்றது".

தாமிரபரணியாறு தற்போது கடலோடு கலக்கும் இடம் தமிழகக் கீழைக் கடற்கரையில் அமைந்துள்ள கொற்கை.

தாமிரபரணியாறு தற்போதைய இலங்கையில் பாய்ந்து சென்றதாக அறிஞர் சான்றுடன் கூறுகிறார்.

கடல் ஏற்ற வற்றத்தால் ஏற்பட்ட புவியியல் மாற்றங்களால், புவியியல் நிபுணர்கள் கூறுகிறபடி 17 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை தனியொரு நிலப்பகுதியாகப் பிரிந்த பிறகு, தாமிரபரணியாறு தற்போதுள்ள கொற்கையில் கடலோடு கலக்கும் நிலை ஏற்பட்டது.

இராமபிரான் தனுக்கோடியில் தங்கி தனுக்கோடி வழியாக இலங்கை சென்றான் எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது.

### 10 : தனுக்கோடி வழியாகச் செல்லவில்லை

"வெண்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கும் இரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமுறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல"

–பழமையான தனுக்கோடியில், ஆலமரத்தடியில் இராமபிரான் வானர வீரர்களுடன் தங்கினான். ஆலமரத்தில் இரைச்சலிட்ட பறவைகளின் ஒலியை அடக்கி, அருகில் உள்ள இலங்கை பற்றிய ரகசியச் செய்திகளை ஆராய்ந்தான் என்றுதான் அகநானூறு கூறுகிறதேயன்றி,

தனுக்கோடி வழியாக இராமன் இலங்கை சென்றதாகக் கூறவில்லை.

பாலம் அமைத்து அதன் வழியே கடல் கடந்து இலங்கைக்கு இராமபிரானும், வானர வீரர்களும் சென்றிருந்தால், அது முக்கியமான செய்தியாகும்; பாடலைப் பாடியவர் நிச்சயம் சொல்லியிருப்பார்.

இராமன் சென்றதாகத் தோத்திரம் கூறுகிற வழியையும் இப்பாடல் சொல்லவில்லை.

### 11 : இலங்கையில் கரையேறும் இடம்

இராமபிரான் தனுக்கோடி வழியாகக் கடல் கடந்து இலங்கை சென்றால், இலங்கையில் இராவணனுக்குரிய அரண்மனையின் பின்பக்கம் போய்க் கரையேறிச் சேரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலையைத் தவிர்க்கவே, தெற்கே கடற்கரை ஓரமாக நெடுந்தொலைவு சென்று கடலைக் கடந்தான் என்னும் செய்தியும் உண்டு.

## 12 : பொருத்தம்

*தனுக்கோடிக் கரையில் இராமன் தன் வீரர்களுடன் தங்கி* இலங்கை பற்றிய இரகசியச் செய்திகளை மட்டுமே அறிந்து கொண்டான் என அகநானூறு கூறுவதற்கும்,

தாமிரபரணியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அணை கட்டினான் என்று மட்டும் தோத்திரம் கூறுவதற்கும்,

தெற்கே நெடுந்தொலைவு சென்று கடலைக் கடந்தான் என்ற செவி வழிச் செய்தி மிகவும் பொருத்தமாக அமைகிறது.

## 13 : கடலைக் கடந்த இடம்

இராமாயண காலத்தில் பாண்டிய மன்னர்களின் தலைநகர் பொருநையாறு கடலோடு கலக்கும் இடத்தில் இருந்ததாக வான்மீகி முனிவர் தமது இராமாயணத்தில் கூறுகின்றார்.

அத்தலைநகரின் பெயர் "அலைவாய்" என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். "அலைவாய்" எனத் திருச்செந்தூர்ப் பதியை நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

எனவே, கொற்கைக்கும் தெற்கே அமைந்துள்ள பாண்டியத் தலைநகர் "அலைவாய்" வழியாக இராமபிரான் கடல் கடந்து சென்றிருக்கக் கூடும் என்னும் எண்ணமும் ஏற்படுகிறது.

ஆனால் எவ்வாறு கடந்து சென்றார் என்பதற்கு இப்போதைக்குச் சான்று எதுவும் கிடைக்கவில்லை.

## *14 : அலைவாய்*

அலைவாய்க்கு மேற்கே 23 கல் தொலைவில் ஆதிச்ச நல்லூரில் மிகப்பெரிய நிலப்பரப்பில் நிகழும் தொடர் புவி அகழ்வு ஆய்வு முடிவுகள், அங்கே ஒரு நாகரிகத் தொட்டில் புதையுண்டு இருப்பதை உறுதி செய்கின்றன.

ஒருகால் அப்பகுதி பாண்டியர் தலைநகர் அலைவாய் மற்றும் அதைச் சார்ந்த ஊர்களாகவும் இருக்கக்கூடும். தொல்லியல் துறை ஆய்வறிஞர்கள் ஆய்வின் முடிந்த முடிவிலேயே அந்நாகரிகத் தொட்டிலின் தெளிவான வடிவம் தெரியவரும்.

கிழக்குக் கடற்கரையில் ஓர் 'அலைவாய்' இருப்பது போன்று மேற்குக் கடற்கரையிலும் ஓர் 'அலைவாய்' (ஆல்வாய்) அமைந்துள்ளமை தொடர் ஆய்வுக்கு வழி வகுக்கிறது.

**15 : காலம்**

பாண்டியர் தலைநகர் 'அலைவாய்' என வான்மீகி முனிவர் கூறுவது பற்றி மேலும் சான்றுகள் தேவைப்படுகின்றன.

சேர சோழ பாண்டிய மன்னருள் முதலாமவன் யாவன் என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

எனவே தான், "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி"; "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடியினர்"; "தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றாற் போல"

என்றெல்லாம் கால நிருணயம் சொல்ல முடியாமல் , அவர்களின் தொன்மையைப் பொதுவாகக் குறிப்பிட நேர்ந்தது; குறிப்பிட்டார்கள்.

இராமாயண நிகழ்வுகளைப் பற்றிய சரியான கால நிருணயமும், ஒரே விதமான இராமாயண நூலும் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஆய்வாளர்கள், அறிஞர்கள் தங்களின் கருத்தாகவே கூறுகிறார்கள்.

காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இராமபிரானின் இறைத் தன்மையைப் பலரும் போற்றி வருவது உண்மை.

**16 : மேற்குக் கடற்கரை வழி**

மேலைக் கடற்கரையை ஒட்டியே இராமபிரான் சீதையைத் தேடிச் சென்றதாகவும் ஒரு கருத்து உண்டு.

கேரள மாநிலம் மலைப்புறம் மாவட்டம், திரூர் (திரு ஊர் – ஸ்ரீநகர்) அருகில், பெருமதில் கோயில் அனுமன் காவு என்னும் கோயில் உள்ளது.

இக்கோயிலில் வேறு எங்கும் காணப்படாத முறையில் இராமபிரான் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அனுமனிடம் இராமன் ஆலோசனை கேட்கும் முகத்தோற்றத்தில் இச்சிலைஅமைந்துள்ளது. சீதையை எப்படி அடையாளம் காண்பது என அனுமனுக்கு இராமன் சொல்லுவதாக இருக்கலாமோ? என ஆய்வாளர் கருதுகின்றனர்.

ஒரு வேளை, இவ்விடம் இராமன் வந்த வழியாக இருக்குமோ?

இப்போது வெளிவராமல் நின்றுபோன Illustrated Weekly இதழில், 1965இல், இராமபிரானும், குழுவினரும் வந்த வழி என அளவையுடன் [Scale] கூடிய 'தரைவழிச் செலவு வரைபடம்' ஒன்று வெளியிட்டனர். அவ்வரை படத்தில் தவறு உள்ளது எனச் சுட்டியதால் விற்பனை ஆனவை போக எஞ்சிய இதழ்களைத் திரும்பப் பெற்றனர்.

**17 : பாலம் இல்லை**

அமெரிக்க நாசா செயற்கைக் கோள் ஒளிப்படம் தனுக்கோடிக் கடலுக்குள் பாலம் போன்று ஒன்று இருப்பதைக் காட்டியது.

ஆனால் சில நாள்களுக்குள்ளாகவே 'அது கட்டப்பட்ட பாலம் இல்லை. சுண்ணாம்பு மற்றும் பவளப் பாறைப் படிவங்களால் ஆன *பாறைதொடர்' எனக் கூறி விட்டது நாசா.*

புவியியல் மற்றும் கடலியல் நிபுணர்கள் அண்மையில் இதே கருத்தைத்தான் வலியுறுத்தியுள்ளனர்.

**18 : ஆன்மீக நோக்கில் கூறுவது**

பதினான்கு லட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, 30கி.மீ. நீளத்தில் இப்பாலம் கட்டப்பட்டது என ஆன்மீக நோக்கில் கூறப்படுகிறது.

ஆன்மீக நோக்கில் கூறஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

அப்படியானால் இக்காலத்தில் இராமாயண நிகழ்வுகள் நடந்திருக்க வேண்டும் என்றாகிறது.

**19 : இராமாயணம் பற்றிய சான்றோர் கருத்துக்கள்**

"வால்மீகி பகவான் காலமும் ஸ்ரீ ராமச் சந்திரன் அவதரித்து இம்மண்ணுலகில் வாழ்ந்த காலமும் ஒன்றேஎன்பது புராணம் வாசிப்பவர்களுடைய பரம்பரைக் கொள்கை. உலக அனுபவத்தை வைத்து ஆராய்ந்து யோசித்தால், வால்மீகி முனிவர் *ராமாயணத்தைப்* பாடியதற்கு முன்னமேயே அதாவது புராதன காலம் தொட்டே சீதாராம சரிதம் மக்களிடையே எழுத்து வடிவம் பெறாமலே பல நூற்றாண்டுகள் வாய்வழிக் கதையாக வழங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது. கர்ண பரம்பரையாக முன்னமேயே இருந்தராம சரிதத்தை எடுத்துக் கொண்டு அதற்கு வால்மீகி பகவான் நூல் வடிவம் கொடுத்தாற்போல் தோன்றுகிறது".

**20 : ஆன்மீக நோக்கில் கூறுவது**

"ஒரு அவதார மூர்த்தியின் வாழ்க்கையைச் சரியாக எடுத்து விளக்குவதற்கு அதே காலத்தில் ஒரு மகரிஷியும் தெய்வாதீனமாக வந்தமைகிறார். இராமாயணத்தை ஆதி காவியமாக இயற்றியவர் வால்மீகி முனிவர்".

**21 : பலவித இராமாயணம்**

இராமாயணம் பற்றி நேரு, இராகுல சாங்கிருத்யாயன் ஆகியோரின் கருத்துக்களை அறிவோம்.

வால்மீகி, கம்பர், துளசிதாசர், மலையாள அத்யந்த ராமாயணம், தாய்லாந்து ராமாயணம் பாடியவர்கள் ஆகிய ஒவ்வொருவரும் இராமாயண நிகழ்ச்சிகளை ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றனர்.

பிபிலியோதிகா கர்நாடிக்காவில் பதிப்பிக்கப்பட்ட தொராவே ராமாயணம், ராமாஸ்வமேதம், நாகச் சந்திராவின் ராமச் சந்திர சரிதம் ஆகிய இராமாயணங்களும் உண்டு.

**22 : தேவலோகத்திலும் இராமாயணம்**

"ஆயிரக்கணக்கான விதமாகச் சொல்லப்பட்டு வந்த இராமனின் வரலாற்றுப் பெருமையைத் தம் சீடர்களுக்கு வால்மீகி விவரித்த போது, அவருடைய சீடர்களுள் ஒருவர் பரத்வாஜர், தேவலோகத்தில் வழங்கி வரும் சதகோடி ராமாயணத்தின் உள்ளடக்கத்தைத் தமக்கு விளக்குமாறு குருவை வேண்டுகிறார்".

**23 : *பாலமன்று***

தனுக்கோடி இராமர் பாலம் என்பது பாலம் அன்று. சுண்ணாம்பு, பவளப் படிவப் பாறைகளின் தொடர் அடுக்கே. அது ஒரு புவியியல் நிகழ்வு.

Adam's Bridge : "It's *not a manmade structure;* "It's a geological Phenomenon" என்பதே அறிவியலுக்குப் பொருத்தமான உண்மை.

**24 : முடிவுரை**

அகழ்வு ஆய்வு, கல்வெட்டு ஆய்வுகளின் முடிந்த முடிபுகளால் முந்திய ஆய்வு முடிவுகள் மறுக்கப்படுவதும், புதிய உண்மைகள் கிடைப்பதும் பட்டறிவில் அறிந்து வருகின்றோம்.

*நிலத்தடியிலும், நீருக்குள்ளும் தமிழக வரலாறு புதைவடிவமாய்* மறைந்துள்ளது. தேடும் போது உண்மை வெளிவரும்.

**மேற்கோள் நூல்கள்**


1. கம்ப இராமாயணம் – பா. 8596.
2. *மாகறல் காரத்திகேய முதலியார்* – இராமாயணக் குறிப்புக்கள் – ஈ.வே.ரா. – ப–8.
3. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் – இராமாயணம் – முன்னுரை.
4. சுவாமி சித்பவானந்தர் – திருவாசக முன்னுரை – ப–78.
5. முத்தண்ணா – ப.49. National Book Trust, New Delhi.
6. Dr. N. Ramanujam, Geology Research Centre, V.O.C. College- The Hindu 17.3.2007 and Prof. Udhayana Pillai The Hindu 21.3.2007.

மற்றும் கட்டுரையாளரின் "சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு" – ஆய்வு நூல்.

2007 செப்டம்பர் திங்களில்

*மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா* நடைபெறும்.

## தொடர்பு முகவரி


பதிப்பாசிரியர்,

**இரா. சதாசிவம்**

செந்தமிழ்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை – 625 001.

போன் : (0452)-2532879


## இல்ல முகவரி


**இரா. சதாசிவம்**

2/404, மருதுபாண்டியர் தெரு,

வட்டாட்சியர் நகர்,

மதுரை–20.



பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர். திரு. சுப. அண்ணாமலை
முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர். திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர். திரு. செ. கந்தசாமி
முனைவர். திரு. க. சின்னப்பா

| | |
|---|---|
| அனுப்புநர்,<br>செயலாளர்,<br>மதுரைத் தமிழ்ச்சங்கம்,<br>மதுரை–1.<br><br>From,<br>Secretary,<br>Madurai Tamilsangam,<br>Madurai - 1.<br>TAMILNADU, S. INDIA | பெறுநர் / To, |